பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 230 ஆடி 01 ஆம் நாள் புதன்கிழமை 17 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## கன்னியாவில் நேற்றுப் பெரும் பதற்றம்

# தென்கயிலை ஆதீனக் குரு முதல்வர் மீது எச்சில் தேநீர் ஊற்றி பிக்கு முன் அடாவடி

- வேடிக்கை பார்த்த பொலிஸார்
- ஆலய வழிபாட்டுக்கு நீதிமன்றம்தடை
- இராணுவமும் பெருமளவில் குவிப்பு




திருகோணமலை, ஜூலை 17

தமிழர் தாயகமான திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலயத்துக்கு உணர்வெழுச்சியுடன் திரண்டு சென்ற தமிழ் மக்கள் ஆலயத்துக்குள் நுழைய விடாமல் அதிகார வர்க்கத்தால் தடுக்கப்பட்டனர். தென்கயிலை ஆதீன குருமுதல்வர் தவத்திரு அடிகளார் மீதும், கோயில் உரிமம் உடையவரான திருமதி கணேஸ் கோகிலரமணி மீதும் சிங்களவர்கள் எச்சில் தேநீர் ஊற்றி அட்டகாசம் புரிந்தனர். 07

## இது சிங்கள – பௌத்த நாடு
# புலிகள் போல் பாய்வதை தமிழர் நிறுத்த வேண்டும்

*இப்படிக் கூறுகின்றார் ஞானசாரர்*

தமிழர்கள் புலிகள் போல் உறுமிக்கொண்டு திரள்வதையும், சிங்கள - பௌத்த மக்களை அச்சுறுத்துவதையும் உடன் நிறுத்த வேண்டும். இது சிங்கள - பௌத்த நாடு என்பதை அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். கன்னியாப் பிரச்சினை தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் சிங்கள - பௌத்த மக்களுக்கே இருக்கின்றது. 07

## முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான தளத்தில் வீரியமடையும் சிங்கள - பௌத்த மயமாக்கல்

*தமிழ் அரசியல் தலைமைகள் அசமந்தம் என்று சாடுகிறார் தென்கையிலை ஆதீனம்*

திருகோணமலை, ஜூலை 17

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் மிகப் பெரிய அளவில் சிங்கள - பௌத்த மயமாக்கம், குறிப்பாக பின் முள்ளிவாய்க்கால் தளத்தில் மிக வீரியமாக முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அது தொடர்பான எதிர்வினை, நேர்மறையான, கூட்டு தந்திரோபாய நகர்வுகள் தமிழ் அரச தரப் 21

## நாட்டில் ஒரே இனத்தை உருவாக்க மாணவர்களை இராணுவமாக்குக

*அத்துரெலிய ரத்ன தேரர் யோசனை*

கொழும்பு, ஜூலை 17

நாட்டில் ஒரே இனத்தை உருவாக்க வேண்டுமாயின் உயர்தர பரீட்சையில் சித்தி பெறும் அனைத்து இன மாணவர்களுக்கும் 03

## தமிழ்க் கைதி உணவு ஒறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் கைதி ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணி தொடக்கம் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் 04

## கன்னியா விவகாரம்
# நீதியின் பிரகாரம் தீர்வு காணப்படவேண்டும்

*நழுவுகிறார் அத்துரலிய ரத்ன தேரர்*

கொழும்பு, ஜூலை 17

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலயத்துக்கு ஜனநாயக வழியில் உரிமை கோரும் தமிழ் மக்களின் உணர்வுகளை நாம் மதிக்கின்றோம். நீதியின் பிரகாரம் தீர்வு காணப்படவேண்டும். அவர்களுக்கு எதிரான வன் 03

## ஈஸ்ரர் தாக்குதல்
# குற்றவாளிகளை பாதுகாக்கவே சாவுத் தண்டனை ஒழிப்பு

*மைத்திரி நேற்று இப்படிக் கூறினார்*

கொழும்பு, ஜூலை 17

போதைப் பொருள் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காகவே சாவுத் தண்டனையை நீக்குவதற்கு முயற்சிக்கின்றார்கள் என்று நேற்றுமுன்தினம் வரையில் கருத்து வெளி 07

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 17

ஒரு கிலோக் கிராம் கோதுமை மாவின் விலை நேற்று முதல் நடைமுறைக்குவரும் வகையில் 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய விலை தொடர்பில் நாட்டின் அனைத்து முகவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரிமா நிறுவனத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மா மீது விதிக்கப்படும் வரிக்கமைய ஒரு கிலோ மாவின் விலை 8 ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது என்றும் ப்ரீமா நிறுவனம் அறிவித்துள்ளது. 06

## மனித குலத்தின் எதிரிதான் 5ஜி! தடுக்குமாறு நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

'5ஜி தொழில்நுட்பம் மனித குலத்தின் எதிரி எம்மில் அதைப் பரிசோ 07

## வறட்சியும் வாட்டுகிறது மழையும் பெய்கின்றது

கொழும்பு, ஜூலை 17

இலங்கையின் பல பகுதிகளில் மழை மற்றும் பலத்த காற்றுடன் கூடிய காலநிலை 03

மொபிடெல் MAX
இப்பொழுது பயமில்லாமல் CONNECT ஆகுங்கள்
மாதாந்தம் ரூபா. 240 க்கு
முற்கொடுப்பனவு பக்கேஜ்
M2M 1000 நிமிடங்கள்
M2M SMS 1000
டேட்டா 1000 MB
4G
அழையுங்கள் 1717
www.mobitel.lk
Sri Lanka Telecom Mobitel
அரச வரிகள் உண்டு.

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 16.07.2019 | 2561 | சிகப்பு |

விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள் . 17 27 41 56

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.725.216/=

17.07.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 671
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.16

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,424,855/-

வெற்றி இலக்கங்கள் 04 10 15 57 Y

அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 துரித அழைப்புக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
தானியங்கி தூல் சேவைக்கு: 0114 825 825

## நாஹா மருத்துவ நிலையம்

கடுமையான விறைப்பு எரிவுடன் கூடிய வாதம், தீவிர பாரிசவாதம், மாறாத புண்கள், ஆஸ்மா,மாதவிடாய் சிக்கல், மரண அவஸ்தைப்படும் நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை.

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி(ஜெகபதி வீடு), மானிப்பாய்.
077 321 2740

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் மரக்கறி, பழவகை மற்றும் சாப்பாட்டு கடைக்கு வேலையாள்கள் தேவை.(பெண்கள் விரும்பத்தக்கது)

077 330 7073

## பெயர்மாற்றம்

ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக் கோட்டையில் வசிக்கும் **ஸ்ரீகணேஸ்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **ஸ்ரீகணேசசர்மா** என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **ஸ்ரீகணேசசர்மா** என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

**ஸ்ரீகணேசசர்மா**

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1006
சீட்டிழுப்பு திகதி 2019.07.15 திங்கட்கிழமை

G 07 28 48 77

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,707,420/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 788 | 16.07.2019 |

வெற்றி இலக்கங்கள் 14 18 27 35 O

அடுத்த வெள்ளி கிழமைக்கான ஜக்பொட் ரூ. 28, 658,976/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778



## பாதுகாப்பு பெட்டகம்

நம்பிக்கை ! பாதுகாப்பு !

இன்றே உங்களுக்கானதோர் பாதுகாப்பு பெட்டகத்தினை பெற்றிட எமது வாடிக்கையாளர் நிலையங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்...

| | |
|---|---|
| யாழ் மெட்ரோ | 021 2030 300 |
| வவுனியா | 024 2223 785 |
| சுண்ணாகம் | 021 2240 305 |
| சாவகச்சேரி | 021 4920 300 |
| சங்கானை | 021 2250 065 |
| மானிப்பாய் | 021 2255 142 |
| நெல்லியடி | 021 2264 149 |
| பருத்தித்துறை | 021 2264 933 |

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

Hatton National Bank PLC - PQ 82

உங்கள் பணத்தை போலவே நேரத்தையும் சேமிக்க, எம்முடைய சில சேவைகளுக்காக

**சம்பத் வங்கி சேவை நிலைய எண்ணிக்கையை**

**இரட்டிப்பாக்கியுள்ளோம்!**

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

**சம்பத் வங்கி அறிமுகப்படுத்தும் முகவர் வங்கியியல் சேவை**

# சம்பத் MY BANK

கட்டணம் செலுத்தல்

SAMPATH MY BANK

நாடுமுழுவதிலும் தற்போது 150 புதிய முகவர் சேவை வலையமைப்புகள் உங்களுக்காக உங்கள் அருகில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.




நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 30 30 50 www.sampath.lk/mybankagent/

## வறட்சியும்...

நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வடமேல், மேல் மற்றும் தென் கடலோரப் பகுதிகளில் மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் மழை பெய்யும் அதே வேளை, பல மாவட்டங்களில் வறட்சி நீடிக்கின்றது.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் தரவுகளின் படி வடக்கு மாகாணம் உள்பட 18 மாவட்டங்களில் 67 ஆயிரத்து 662 குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 29 ஆண்டுகளின் பின்னர் நாட்டின் மிகக் குறைந்த அளவான மின் உற்பத்தி நடைபெறுகின்றது என்று மின்சார மற்றும் சக்தி வளத் துறை அமைச்சின் பேச்சாளர் சுலக்சன ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். நீர் மின் உற்பத்திக்குப் பயன்படும் ஆறுகள் வற்றியுள்ளதால் முக்கிய நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் 21.3 வீதத்தால் குறைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## நீதியின்...

முறைகள் எதனையும் சிங்கள பௌத்த சகோதரர்கள் பிரயோகிக்கக்கூடாது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

தமிழர் பிரதேசங்களில், தமிழர்களின் விருப்பமின்றி விகாரைகள் அமைக்கப்படாது. தமிழர்கள் விரும்பாவிடின் அவர்கள் நீதிமன்றத்தையோ பொலிஸையோ நாடத்தேவையில்லை. நாமே அத்தகைய விகாரைகளை அகற்றுவோம் என்று யாழ்ப்பாணத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் கன்னியாவில் தமிழ் மக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தியிருந்தனர். போராட்டத்தில் பங்கேற்ற இந்துத் துறவி மீது, சிங்களவர்களால் எச்சில் தேநீர் ஊற்றப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

'தமிழ் சிங்களவர்களுக்கிடையிலோ, இந்து பௌத்த மதத்தினர்களுக்கிடையிலோ எவ்வித முரண்பாடுகளும் ஏற்படக்கூடாது. ஜனநாயக வழியில் நீதியின் பிரகாரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இரு இனத்தவர்களும் இரு மதத்தினர்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்' என்றார்.

(ஒ.5,22)

## நாட்டில்...

இராணுவப் பயிற்சிகளை வழங்கி இலங்கையின் வரலாற்றை அவர்களுக்கு ஆழமாக கற்றுக்கொடுக்க வேண்டும். அப்போது எல்லோரும் ஓர் இனமாகுவார்கள். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்துப் பாடசாலைகளையும் கலவன் பாடசாலைளாக மாற்ற வேண்டும். ஒரே வகையான சீருடைகள் வழங்கப்பட வேண்டும். தலை மற்றும் முகத்தை மூடக் கூடாது. அவ்வாறு மூடிக்கொண்டு வர வேண்டுமாயின் மத்திய கிழக்குக்கு அனுப்ப வேண்டும். இலவச கல்வியின் தந்தை கன்னங்கர கூறியது போன்று, மத்திய கல்லூரிகள், மகா வித்தியாலயங்கள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளுக்கு மாணவர்களை கட்டாயம் அனுப்புங்கள். அதன் பின்னர் உயர் தரப்பரீட்சையில் தேர்ச்சி பெற்ற அனைவரும் இராணுவத்துக்குச் சென்று பயிற்சி பெறுங்கள். அப்போது நாம் ஒரே இனமாகின்றோம். அனைவரும் இலங்கையின் வரலாற்றை ஆழமாக கற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளவர்கள் தமிழை கற்றுக் கொள்வதில் பிரச்சினையில்லை. ஏனைய பகுதிகளை சார்ந்தவர்கள் சிங்களத்தில் வியாபாரத்தில் ஈடுபட முடியுமாயின் ஏன் அவர்களால் சிங்கள மொழியை பேச இயலாது. ஆகவே ஒரு தேசிய கல்வி கொள்கைக்குள் அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்க வேண்டும் - என்றார். (எ)





BACHELOR OF INFORMATION TECHNOLOGY

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் U.G.C அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பாகும். இரண்டு கல்வி ஆண்டுகள் கொண்ட இக் கற்கை நெறியின் ஒரு கல்வி ஆண்டு இரண்டு Semester களை கொண்டதாகும். இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ உயர் ஊதியத்துடன் தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உலகின் தலைசிறந்த பல் கலைக்கழகம் ஒன்றில் பட்ட மேற் படிப்பு கற்கை நெறி ஒன்றை தொடர்வதற்கும் அமையும்



BACHELOR OF INFORMATION TECHNOLOGY
TOP-UP DEGREE
(1 YEAR)

அரச அல்லது அரச அனுமதிபெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா (H.N.D) அல்லது இதற்கு நிகரான கல்வித் தகைமை உடைய மாணவர்கள் Bacholor of Information Techology பட்டப்படிப்பில் மூன்றாம் வருடத்திற்கு நேரடியாக உள்வாங்கப்படுவார்கள். (அதாவது மூன்று வருடகால பட்டப்படிப்பின் முதல் இரண்டு வருடகாலங்கள் விதிவிலக்கு. exemption வழங்கப்படும்.

(C/10630)(10)

மேற்படி பட்டப்படிப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

உடன் அழையுங்கள்
0777174443

www.blccampus.edu.lk

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

LINCOLN UNIVERSITY COLLEGE

Recognized by:


# INVITATION FOR BID (IFB)

## Department of Agrarian Development, Jaffna District

1. The Assistant Commissioner of Department of Agrarian Development, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for renovation of minor tanks as described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. Since the total cost estimate of this procurement is below Rs.50 Mn regional preference and CIDA grade preference shall apply as stipulated in public finance circular No 04/2016 (ii).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the CIDA/ICTAD registration and qualification requirements listed below. Additional details are provided in the Bidding Documents.
4. Interested eligible bidders may obtain further information and inspect the Bidding Documents at the Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna during office hours.
5. A complete set of Bidding Documents in English language should be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Commissioner, Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna from 17.07.2019 to 01.08.2019 from09:00 hrs to 15:00 hrs, upon payment of a nonrefundable fee ofRs.2000.00for each set. The method of payment will be by cash.
6. Bids shall be delivered in duplicate to the Chairman, District Procurement Committee, Department of Agrarian Development, Point Pedro Road, Nallur, Jaffna on or before 10:00 hrs on 02.08.2019 Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid up to 63 Days after the deadline for bid submission.
8. All bids shall be accompanied by a bid security Issued by a commercial bank operating in Sri Lanka approved by the Central Bank of Sri Lanka using the form of Bid Security included in Section – 9. The amount of Bid Security shall be as per details given below and shall be valid to 90Days up to 02.11.2019 from the date of Bid opening.
9. Pre-bid meeting will be held at Department of Agrarian Development, Pointpedro Road, Nallur, Jaffna commencing at10.00 a.m. on 24.07.2019
10. The Table referred to above is:

| No | Contract No & Title of contract | Proposed contract Price (Mn Rs.) | Bid Security Amount (Rs) | Renovation Period | Required ICTAD Registration in Irrigation |
|---|---|---|---|---|---|
| 1 | 9/7/05/ONUR/2019 Renovation of Irupalai Periya Kulam at Irupalai East | 3.30 | 33,000.00 | 2 Months | C8 and C7 |
| 2 | 9/7/06/ONUR/2019 Renovation of KaraveddyanKulam at Irupalai East | 3.72 | 38,000.00 | 2 Months | C8 and C7 |
| 3 | 9/7/09/ONUR/2019 Renovation of Kernikkaraik Kulam at Velanai West | 3.70 | 37,000.00 | 2 Months | C8 and C7 |
| 4 | 9/7/10/ONUR/2019 Renovation of Velan Kulam & Channel at Analaithivu | 3.63 | 37,000.00 | 2 Months | C8 and C7 |
| 5 | 9/7/12/ONUR/2019 Renovation of Niththiyaveddaik Kulam at Maruthankerny D.S.Division | 4.07 | 41,000.00 | 2 Months | C8 and C7 |
| 6 | 9/7/Cha-6/Dept/2019 Renovation of Karampagam Channel at Chavakachcheri | 2.42 | 25,000.00 | 2 Months | C8 and C7 |

Date: 15.07.2019

Assistant Commissioner,
Department of Agrarian Development,
Jaffna District
T.P No - 021 222 2396
Fax – 021 222 4058

## வேலைக்கு ஆள் தேவை

தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில்
நோயாளரைப் பராமரிப்பதற்கு
ஆண்/பெண் வேலையாள்கள் தேவை.

- **ஆண்களுக்கு ஒரு நாளைக்கு 1500/=**
- **பெண்களுக்கு ஒரு நாளைக்கு 1300/=**

நேரில் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு : 076 943 1234**

**லயன் சி.ஹரிகரன்**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**ஆதாரவைத்தியசாலை, தெல்லிப்பழை.**

(CS 26708)(14.17)

# MASSIVE VEHICLES AUCTION SALE



**18th of July**

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM

**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View – 15th, 16th & 17th July**

(Please refer the Udayan On 15th of July 2019
For the Full List Of Vehicles)

LOLC FINANCE

**SCHOKMAN & SAMERAWICKREME**
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 01 142, காரைநகர் வீதி வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கந்தன் பெண் சின்னி என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனம் 1932.02.17 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு S.சபாபதிப்பிள்ளை முகதாவில் 17908 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதியில் வயிரவன் கொத்தன் பெண் சின்னியின் கொள் விலையாக இருந்து இளையவன் பெண் வள்ளிப்பிள்ளைக்கு எழுத்து மூலம் உறுதி எழுதாமல் சீதனமாக கொடுக்கப்பட்ட தென்றும் குறித்த இளையவன் பெண் வள்ளிப்பிள்ளை அடியற்று காலஞ்சென்ற தவராசா பெண் ராசலட்சுமியின் தகப்பனுக்கு இவ்வாதனம் சென்றடைந்தது. பின்னர் அவருடைய தகப்பனார் காலஞ்சென்ற தவராசா பெண் ராசலட்சுமியினை வந்தடைந்த பிதாவழி முதுசமும் எனவும் தங்களின் 40 வருடங்களுக்கு மேற்பட்ட தங்குதடையற்ற ஆட்சியுமாகும் எனக் குறிப்பிட்டு கந்தையா தவராசாவும் பெண் ராசலட்சுமியும் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 28.11.2005 ஆம் திகதி 124 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "பன்னாவிலி தோட்டம்" நெற்பரப்பு இரண்டு இதில் கிழக்குப் பக்கம் சீதனம் கொடுத்து நெற்பரப்பு ஒன்று நீக்கப்பட்டு நெற்பரப்பு ஒன்று (நெ.பரப்பு)

வடக்கு : 3அடி அகலப்பாதை
கிழக்கு : பெரியதம்பி புலேந்திரன் பெண் ஜெயமதியின் ஆதனம்.
தெற்கு : தம்பிப்பிள்ளை கந்தசாமியின் ஆதனம்
மேற்கு : றோட்டு இதடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்.

தற்போது இவ்வாதனத்தை கந்தையா தவராசாவும் பெண் ராசலட்சுமியும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தையா தவராசாவும் பெண் ராசலட்சுமியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை**

## தமிழ்க் கைதி...

ஈடுபட்டுள்ளார். போராட்டத்தை அவர் கைவிட மறுப்பதால் அவரை தனிச் சிறைக் கூண்டுக்குள் அடைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளரான நெல்லியடியைச் சேர்ந்த கனகசபை தேவதாசன் (வயது 62) என்ற கைதியே உணவுஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

2007ஆம் ஆண்டு கோட்டை தொடருந்து நிலையத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவர் கைது செய்யப்பட்டார். இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒன்றில் ஆயுள்கால சிறைத் தண்டனையும் ஒன்றில் 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளில் தனக்குத் தானே நீதிமன்றத்தில் வாதாடிய இவர், தனக்குரிய சாட்சிகளைத் தயார் செய்து நீதிமன்றத்தில் நெறிப்படுத்துவதற்குத் தனக்குப் பிணை வழங்கப்பட வேண்டும் என்று கோரி இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பில் நீதி அமைச்சின் அதிகாரி ஒருவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவதற்கான கடிதம் இவரால் எழுதப்பட்டுள்ள போதிலும், சிறைச்சாலை அதிகாரிகளால் அது உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிகின்றது.

அத்துடன் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிடுமாறு வலியுறுத்திய அதிகாரிகளின் கோரிக்கைக்கு இவர் செவிசாய்க்காத காரணத்தாலேயே, குற்றம் செய்யும் கைதிகளைத் தண்டிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற தனிச் சிறை அறைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## சிறுநீரகம் தேவை

B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

T- 076 239 9874

## காணி விற்பனைக்கு

**பிறவுண் றோட் கல்வாரி சேர்ச்சுக்கு அருகில் உள்ள லேனில் 5பரப்பு காணி விற்பனைக்கு.**

**076 702 3565**





இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்

பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200. மோட்டார் சைக்கிள் காட்சியறை : 195, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ. தொ: 011-7607705,
மற்றும் நாடளாவிய ஹொண்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக. / Honda Sri Lanka

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

# 10 ஆம் ஆண்டு நினைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 . 02 . 1921 | 17 . 07 . 2009 |

## அமரர் முத்துவேலு சண்முகரத்தினம்

(ஓய்வுபெற்ற உணவுக்கட்டுபாட்டு அதிகாரி)


ஆண்டுபத்தாயினும் ஆறவில்லை
எம்துயரம் ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டார் மீள்வதில்லை - என்ற
பட்டினத்தார் மொழிக்கு பழுதில்லை
அவனியில் மண்ணில் நல்லவண்ணம்
வாழ்ந்தார் மாண்புகழ்
மனைவியாலும் மக்களாலும்
மறந்திடத்தான்
முடியுமோ?

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

43, கலட்டி முந்தல்லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் அன்பினில்
சண்முகரத்தினம் சாந்திக்குமார்
(மகன்- UK)

# மரண அறிவித்தல்கள்



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 31 . 05 . 1942 | 15 . 07 . 2019 |

## லயன் சரவணமுத்து கனகரசன் J.P

ஓய்வு நிலை நில அளவையாளர் நாயகம்.
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் (தமிழரசுக்கட்சி)
(ஒன்றிய தலைவர், பண்ணாகம்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் சரவணமுத்து கனகரசன் J.P (ஓய்வு பெற்ற நில அளவையாளர் நாயகம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், தமிழரசுக்கட்சி, எரிபொருள் நிலையம் சுன்னாகம் உரிமையாளர். பண்ணாகம் ஒன்றியத் தலைவர்) அவர்கள் 15.07.2019 திங்கட்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் பாசமிகு ஜெகதீஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (ஆசிரியர்) பாறுவதி தம்பதியினரின் மூத்த அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - பத்மாவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான மா. சரஸ்வதி, சி. தண்டிகைநாச்சியார், ச. அருளம்பலம், ச.நமசிவாயம், ச.தபேந்திராதேவி மற்றும் ச.ஞானேஸ்வரி(கனடா), ச.வேலாயுதம் (கனடா), ச.கேதீஸ்வரன்(கனடா), இ.பராசக்தி(நோர்வே), ச. நடேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற க. மாணிக்கவாசகர். செ.சின்னத்துரை, ந. ஞானசோதி(கனடா), காலஞ்சென்ற ந.சண்முகராசா, வே.புனிதாம்பிகை (கனடா), கே.வனிதா(கனடா) காலஞ் சென்ற அ. இராமலிங்கம், ந.புஸ்பராணி(கனடா) காலஞ்சென்ற செ.சிவஞானம், மகாலிங்கம் இராஜேஸ்வரி(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2019 வியாழக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தகவல்: க.ஜெகதீஸ்வரி (மனைவி)**

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 . 02 . 1978 | 15 . 07 . 2019 |

## திருநாவுக்கரசு சிவமாறன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 135, உதயநகர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிவமாறன் (மாறன், சட்டன்) 15.07.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு - மோகனராணி தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரீவித்தியபிரியாவின் பாசமிகு கணவரும்,பகலவன், சங்கவி, கயல்விழி, பிறைவிழி ஆகியோரின் தந்தையும், தடாதகை பிராட்டியாரின் பெறாமகனும், மணிசேகரன், காலஞ்சென்ற வாதவூரன் மற்றும் முரளிதரன், துர்க்கா, அஞ்சலா, எழில்வேந்தன், திருக்குமரன், உமையாளர் ஆகியோரின் சகோதரரும், பத்மரஞ்யினி, டக்சலா, அருள்வேந்தன், குகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று 9.30 - 10.30 வரை கிளிநொச்சி பொது சந்தையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.30 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(AKN/762)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

077 910 8768



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 12 . 1948 | 13 . 07 . 2019 |

## இராசதுரை சிறீரங்கநாதன் (நேரு)

(மரக்கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் (மோதற), முன்னாள் 768 மினிபஸ் சங்கத் தலைவர், பாடசாலை சேவை 61 - 6872 உரிமையாளர், நாச்சிமார் கோயில் முன்னாள் அன்னதான சபைத் தலைவர்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியைப் வசிப்பிடமாகவும், உடுப்பிட்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை சிறீரங்கநாதன் (நேரு) 13.07.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசதுரை - ஞானாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், இராசையா - இராசபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி நாகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், கிருஷ்ணியின் பாசமிகு தந்தையும், ரகுபதிராஜா, காலஞ்சென்ற சுதந்திராதேவி மற்றும் சுசீலாதேவி, அருட்செல்வம் (லண்டன்), ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பூபாலச்சந்திரனின் அன்புப் பெறாமகனும், யோகேஸ்வரி, துரைராஜா, மனோகரன், சிவராணி, மனோகரன், மகாலக்ஷ்மி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், முருகதாசின் சகலனும், இந்துஜா, அஜந்தன் (பிரான்ஸ்), ரஜீகரன் - மாலினி (லண்டன்), கோபிநாத் (பிரான்ஸ்), வினோஷா (பிரான்ஸ்), செந்தூரன் சுலட்சணன், நிறோஜா, ஆகியோரின் அன்பு மாமனும், கஜீபன், கோபிகா (லண்டன்), சிவதாஸ், சங்கீதா, பிரகாஷ், ரமணதாசன், சாந்திகா, சாமந்தி ஆகியோரின் பெரியப்பாவும், தேவராஜா, ஜிவேந்திரன் ஆகியோரின் சித்தப்பாவும், பிரியா, சூட்டி, துருபநாத் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், தேஜாஷ்னி, சந்தனி, ஆதிரையன், ஆரூரன், சுருதி, சுரபி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சந்தை வீதி, உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்வை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**சந்தை வீதி, உடுப்பிட்டி.**

(cs 26707) (13.17)

**தகவல்: சகோதரர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 08 . 05 . 1948



உதிர்வு 14 . 07 . 2019

# நடராசா சிவசோதி

**(சன்றைஸ் சாவகச்சேரி, அம்பிகை களஞ்சியம் யாழ்ப்பாணம் முன்னாள் கணக்காய்வாளர்)**

காரைநகரைப்பிறப்பிட மாகவும் பெருங்குளம் சந்தி சாவகச்சேரியை வதிவிடமாகவும் தற்போது மீசாலை மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிவசோதி (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா விஜயலட்சுமி தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களானசதாசிவம்-பிள்ளையம்மாதம்பதியினரின் அன்பு மருமகனும் தையல் நாயகியின் அன்புக்கணவரும் சுதர்சினி (சுவிஸ்), சிவதர்சினி (மீசாலை), சிவசங்கர் (சுவிஸ்), சுபாஜினி (மீசாலை), சிவவதனி (மீசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்கினேஸ்வரன் (சுவிஸ்) யதுஸ்ஸா சதீஸ்வரன் (மீசாலை), யோகேந்திரன் (மீசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் டக்ஸன் (சுவிஸ்), டனுக்ஸன் (சுவிஸ்), மதிவதனி, மதுஷன், காவியா, கபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற அருந்தவநாயகி காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(18.07.2019) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**“பொன்னர் ஒழுங்கை”**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 893 5297**


## கோதுமை...

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், தமது தயாரிப்புப் பொருள்களின் விலைகள் தொடர்பில் விரைவில் தீர்மானிக்கவுள்ளோம் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா விலை அதிகரிப்பு தொடர்பில் இதுவரை தமக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படவில்லையென நேற்று மதியம் இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். (எ)

## மரண அறிவித்தல்கள்

# செல்லையா மண்டலேஸ்வரி



தோற்றம் 09.02.1941 மறைவு 10.07.2019

யாழ். கரவெட்டி வதிரி அரசவீதியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா Mitcham ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லையா மண்டலேஸ்வரி 10.07.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - மீனாட்சிபிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற கிருட்ணபிள்ளை - கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், பவானி, மாலினி, சாந்தினி, செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், இராமநாதன், கருணாகரன், கலைச்செல்வி, காலஞ்சென்ற சிவஞானதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சிவபாலசுப்பிரமணியம் தங்கமணி, பரமேஸ்வரி, நவரத்தினராசா, தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தவராணி, சந்திரா, கணேசரட்ணம் மற்றும் ஆறுமுகாநந்தன், தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோசிகா, கோகுலன், மதுனிஷா, திவானி, பிரவிந்த, புருசோத், ரமணன், அரவிந்த், அபிராமி, அசோக், ஆகாஷ், அபிஷா, காவியா, சகானா, ஆதித்யா, நயனிகா, கவிஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரியனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தங்கமணி - சகோதரி - 075 469 9890**
**பரமேஸ்வரி - சகோதரி - 075 543 6043**

# திருமதி அம்பலவாணர் பராசக்தி



சுருவிலைப்பிறப்பிடமாகவும் வவுனியா குருமன்காடு, இல.27 பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் பராசக்தி அவர்கள் கடந்த (15.07.2019) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அம்பலவாணரின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்ற முருகேசு வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, சின்னாச்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, நல்லதம்பி, நாகம்மா, அன்னலட்சுமிஆகியோரினதும் மற்றும் மாணிக்கம் (பிரான்ஸ்) அவர்களின் அன்புச்சகோதரியும் சிவகுமாரன் (இத்தாலி), சிவறஞ்சிதம் (கனடா), சிவபாலசுந்தரன் (செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்), சிவசிறீதரன் (லண்டன்), சிவச்செல்வன் (பிரான்ஸ்), சிவதர்சினி (ஆசிரியர், யாழ் வியாவில் சைவ வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும் புஸ்பராணி, றஞ்சித் அலோசியஸ், சுதாஹரி, அனுராதா, ஸைமா, நவரட்ணஜோதி (ஆசிரியர், யாழ்/பெரியபுலம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அருண்பாரத், ஜக்குலீன்வர்ஷினி, ஆரணி, அட்ஷயா, அரவிந்ஶ்ரீ, பாரத்ஶ்ரீ, நிலானி, லியா, ஆதிரன், ஆரகன், அனந்திதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2019 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது யாழ் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: பிள்ளைகள்**
**பாலன்: 077 745 6465**
**சிறி: 00447448190985**
**சிவச்செல்வன்: 0033755119603**

**இல.27, பிரப்பங்குளம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தோற்றம் 11 . 02 . 1945



மறைவு 16 . 07 . 2019

# நாகேசு சிவப்பிரகாசம்

புங்குடுதீவு 2ஆம்வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் இல.165, ஆடியபாதம்வீதி, திருநெல்வேலியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நாகேசு சிவப்பிரகாசம் நேற்று (16.07.2019) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் சயந்தினி (கனடா), பபிதாஸ்(கனடா), Dr.சுபாஸ்கரன்(கிளி/மாவட்டபொதுவைத்தியசாலை), லோகதர்ஜினி (ஆசிரியை, கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் இராசகுமாரன் (கனடா), ராதிகா (கனடா), Dr.இரதினி (பல்மருத்துவர், யாழ். போதனா வைத்தியசாலை), ஶ்ரீனிவாசன் (கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனடாவில் வசிக்கும் பரமேஸ்வரி, பரமநாதன், சோமசுந்தரம் மற்றும் காலஞ்சென்ற குலேந்திரன், வசந்தகோகிலம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் நிக்சலா, சதாங்கி, சதுர்ஜா, அக் ஷரன், தருணிகா, கேஷிகன், லதுவர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சண்முகராஜா, யோகேஸ்வரி, மகேஸ்வரி, கனகேஸ்வரி, ஞானேஸ்வரி, மங்களேஸ்வரி, முருகதாஸ், காலஞ்சென்ற செந்தில்நாதன் (கூட்டுறவு பரிசோதகர்), புஸ்பவதி, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2019) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப10 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 165, ஆடியபாதம்வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 4248**

## தென்கயிலை...

பொலிஸாரின் தடையையும் தாண்டி, ஆயிரக்கணக்கானோர் ஆலயத்துக்குள் நுழைய முற்பட்டனர். இருப்பினும், அமைதி வழியில், ஆலயத்துக்கு வெளியில் வழிபாடு நடத்தப்பட்டது.
தமிழர்களின் பூர்விக வரலாற்று வழிபாட்டு தலமான கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குகள் அடாத்தாக நுழைந்து, அங்கிருந்த பிள்ளையார் ஆலயத்தை இடித்தழித்துவிட்டு விகாரை அமைக்கின்றனர். தொல்பொருள் திணைக்களமும் இதற்கு உடந்தையாக உள்ளது.
இதையடுத்து, தன்னெழுச்சியாக ஒன்று திரண்ட தமிழ் மக்கள் கன்னியா நோக்கி ஒன்று திரள அழைப்பு விடுத்திருந்தனர். இதன்படி பல பாகங்களிலிருந்தும் கன்னியா நோக்கி தமிழர்கள் திரண்டிருந்தனர். கன்னியா நோக்கி சென்றவர்கள் மீது பல்வேறு நெருக்குதல்களை இராணுவம், பொலிஸ் வழங்கியது. கன்னியாவுக்குச் செல்லும் பேருந்துகள் அடையாளப்படுத்தப்பட்டு, அடிக்கொரு முறை மறிக்கப்பட்டது. அனைவரும் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டனர். முல்லைத்தீவிலிருந்து சென்ற பேருந்து 8 இடங்களில் மறிக்கப்பட்டு, சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

**நீதிமன்ற உத்தரவு**

இந்தத் தடைகளை கடந்து தமிழ் மக்கள் கன்னியாவை நெருங்கிய போது, அங்கு கலகமடக்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். கன்னியாவுக்குள் தமிழ் மக்கள் நுழைய தடைவிதித்து, திருகோணமலை நீதிமன்றத்தில் தடையுத்தரவும் பொலிஸாரால் பெறப்பட்டிருந்தது. தடையுத்தரவு காண்பிக்கப்பட்டு, மக்கள் உள்நுழைய அனுமதிக்கப்படவில்லை. இதேநேரம், கன்னியாவுக்குள் இருந்த சட்டவிரோத விகாரைக்குள் நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.
'எங்களை (தமிழ் மக்கள்) அனுமதிக்க முடியாது என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். ஏன் அனுமதிக்க முடியாது. அங்கு சிங்களவர்களை மாத்திரம் அனுமதித்துள்ளீர்கள் என்று திருப்பிக் கேட்டபோது, அது அவர்களுக்கு உரித்தானது. உங்களுக்கு உரித்தானது என்றால் நீதிமன்றத்தை நாடி நீங்கள் நிரூபித்துக் கொள்ளுங்கள் என்று பொலிஸ் அத்தியட்சகர் பதிலளித்தார்' என தென்கையிலை ஆதீனத்தின் இரண்டாம் குரு தம்பிரான் சுவாமிகள் தெரிவித்தார்.

**எச்சில் தேநீர் வீச்சு**

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக பொலிஸார் தமிழ் மக்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் உள்ளே தங்கியிருந்தமை கண்ட இளைஞர்கள், வழிபாட்டுக்கான பயணத்தை போராட்டமாக மாற்றினர். இதன்போது இருவர் மட்டும் சென்று வழிபட்டு வரலாம் எனப் பொலிஸார் கூறினர். அதன்படி கோயிர் உரிமையாளரான கோகிலரமணியும், தென்கயிலை ஆதின குருமுதல்வரும் பொலிஸ் வாகனத்தில் உள்ளே சென்றனர்.
சென்று சற்று நேரத்தில் வாகனம் திரும்பி வந்தது. ஆலயத்தின் வாயிலுக்கு செல்ல முன்பே அங்கு கூடியிருந்த சிங்களவர்களில் ஒருவர் கோகிலரமணி மீதும், குருமுதல்வர் மீதும் சூடான எச்சில் தேநீரை வீசியிருக்கிறார். வயது, பாலினம், சமயத்துறவிக்கான மரியாதை என்று எதுவும் பார்க்காது கெட்டவார்த்தைகளால் உரத்த குரலில் சத்தம் எழுப்பியிருக்கின்றனர். கூடியிருந்தவர்கள் கூக்குரலிட்டிருக்கின்றனர். இதனையடுத்தே அவர்கள் திரும்பி வந்துள்ளனர்.
'எச்சில் தேநீரை அவர்கள் ஊற்றினார்கள். இந்தச் சம்பவம் நடைபெறும்போது பொலிஸ் அத்தியட்சகர் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் நின்றார். இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டபோது, பொலிஸில் முறையிடுங்கள். மருத்துவமனையில் சென்று படுங்கள். அப்போதுதான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று பதிலளித்தார்கள். நாம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளோம். அத்தோடு பொலிஸாருக்கு எதிராகவும் முறைப்பாடு செய்யவுள்ளோம்' என்று தம்பிரான் சுவாமிகள் தெரிவித்தார்.
(ஒ.5,21,22)


# கண்ணீர் அஞ்சலி



எமது மன்ற உறுப்பினரும் சண்டிலிப்பாய் பிரதேச சமூக நல மருத்துவ உத்தியோகத்தருமாகிய வைத்திய கலாநிதி திருமதி சு. உதயகௌரி அவர்களின் அன்புத் தந்தையார்


## சி.துரைசாமிஐயர்

அவரது பிரிவுத் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

வடமாகாண ஆயள்வேத மருத்துவர்
நலன்புரி மன்றம்

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
17 . 07 . 1929



மறைவு
21 . 04 . 2014

வைத்திய கலாநிதி

## சே.இந்திரராஜா

உங்கள் நினைவில்,

"செல்வம்"
உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்.

அன்புள்ள மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
நாகேஸ்வரி

# மரண அறிவித்தல்



## திருமதி இராஜரட்ணம் தையல்அம்மா

திருநெல்வேலி வடக்கு, கலாசாலை வீதி, 2ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் தையல்அம்மா நேற்று (16.07.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான ஆனந்தநடராஜா இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான சின்னத்துரை செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் இராஜரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், நிரஞ்சலா, நிஷாந்தி, நிஷாந்தன், நித்தியா ஆகியோரின் பாமிகு தாயாரும், சிவகுமார், சுரேஸ், பிரணவன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வைஷ்ணவன், நிதுஜன், விதுஜன், ஷிவானி, அபிஷேக், அபிநயா, அபிரரமி, பிரகதி, ஜானவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 645 4980** **தகவல்: குடும்பத்தினர்.**


## குற்றவாளிகளை...

யிட்டுவந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றைய தினம் புதிய தகவலை வெளியிட்டுள்ளார்.
உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல் குற்றவாளிகளுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையைத் தவிர்ப்பதற்காகவே சாவுத் தண்டனையை நீக்குவதற்கான தீர்மானத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வர முயற்சிக்கின்றனர் என்று அரச தலைவர் நேற்றுத் தெரிவித்தார்.
பெலேந்த ரஜமகா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாது கோபுரம், நூல் நிலையம் மற்றும் சமய உரை மண்டபம் ஆகியவற்றை மகாசங்கத்தினரிடம் கையளிக்கும் புண்ணிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சாவுத் தண்டனையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டவரைவு கொண்டு வருவதற்கு எடுக்கப்படும் முயற்சி ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற அழிவுகளின் மூலம் சுமார் 300 அப்பாவி மக்களின் உயிர்களை காவு கொண்ட கொடூர பயங்கரவாத நடவடிக்கைக்கு வகை கூறவேண்டியவர் களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையை தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் முயற்சி என்று நம்புகின்றேன்.
நாட்டின் குற்றவியல் சட்டத்திற்கேற்ப கொலை, இராஜதுரோகம் போன்று பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக குற்றவாளியாக இனங்காணப்பட்டால் சாவுத் தண்டனை வழங்கப்படுமென்பதுடன், சாவுத் தண்டனையை நீக்குவதற்கு அரசில் உள்ள சிலர் எடுக்கின்ற முயற்சியின் மூலம் எந்தவொரு குற்றவாளிக்கும் தண்டனை வழங்க முடியாது.
மத்திய வங்கி கொள்ளைக்குப் பொறுப்பான அனைத்து வகைகூறவேண்டியவர்களும் தற்போது இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டுக்கு வெளியே உள்ளவர்களுக்கு பன்னாட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டு வருவதற்காக தான் சிங்கப்பூர் தலைமை அமைச்சருடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியிருப்பதாகவும் இந்த அனைத்து விசாரணை நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது.
ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. அவர்களுக்கெதிராக தெளிவான சாட்சிகள் உள்ளன. சட்டத்துக்கு அமைவாக அவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.
சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு அரச நிர்வாகத்தில் தண்டனைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் தண்டனைக்கு பயப்படுவதன் மூலம் சமூகத்தில் குற்றங்கள் குறைந்து சிறந்ததொரு நாட்டையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப முடியும் - என்றார். (ஒ.5)

## மனித...

திக்காதே!' என்ற கோரிக்கையை முன்வைத்துப் பத்துக்கு மேற்பட்ட பொது அமைப்புகள் மக்களுடன் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.
யாழ்ப்பாண மாநகர சபைக்கு முன்பாக நாளை வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ் மருத்துவர் குழு, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை, வல்லமை, கிராமிய உழைப்பாளர் சங்கம், சைவ மகாசபை, சமூக விஞ்ஞான ஆய்வு மையம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், சமூக மேம்பாட்டு அமையம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகிய அமைப்புகள் இணைந்து துண்டறிக்கையை வெளியிட்டுள்ளன.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தின் மக்கள் செறிவாக வாழ்கின்ற பல இடங்களிலும் சுமார் 80 அடி உயரமான கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன. இவை அதியுச்ச திறன்கொண்டதும் முறையான பரிசோதனைகளுக்கு உட்படுத்தி பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாததும் மாறாகப் பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆய்வாளர்கள், மருத்துவத்துறை சார்ந்தோர் மற்றும் சூழலியலாளர்களால் வன்மையாக எதிர்க்கப்படுகின்றதுமான, ஐந்தாவது தலைமுறைத் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பமான 5ஜி அலைக்கற்றைகளுக்கானவை என்று அறியக்கூடியதாக இருக்கின்றது.
மக்களின் எதிர்ப்புகளைக் கவனத்தில் எடுத்து, இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதற்கு இதுவரை எந்தவொரு உள்ளூராட்சிச் சபைகளோ, மாகாண, கொழும்பு அரசுகளின் இதனுடன் தொடர்புடைய திணைக்களங்களோ, அரசியல்வாதிகளோ முன்வராமை பெரும் ஏமாற்றத்தைத் தருகின்றது.
இந்த 5ஜி தொழில்நுட்பமானது, பொருள்க்ளின் இணையம், தானியங்கி வாகனங்கள், தீவிர உயர் வரையறை காணொலி போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கானது. பல்தேசியக் நிறுவனங்கள், இத்தகைய செயற்கை நுண்ணறித் தொழில்நுட்பத்தையும் தானியங்கல் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்தியதன் மூலம், ஏராளமானோருக்கு வேலையிழப்புகளை ஏற்படுத்தியுள்ளன.
மண்ணிலும் விண்ணிலும் 5ஜியை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்கான பன்னாட்டு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பில், இதுவரை 187 நாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் கையொப்பமிட்டுள்ளனர்.

**பாதிப்புக்கள்**

5ஜி தொழில்நுட்பமானது, மக்களை மின் உணர்திறன்மிக்கவர்களாக மாற்றிவிடும். மின்காந்தப் புலத்தின் தாக்கத்துக்கு உள்ளாகுபவர்கள், மின் உணர்திறன் மிக்கவர்களாக மாறுகிறார்கள். மறதி, கவனஞ்செலுத்த இயலாமை, இதயத் துடிப்பு அதிகரித்தல், சோர்வும் களைப்பும், காது, கண் போன்றவற்றில் வலி ஏற்படுதல், வீங்குதல் போன்றன அவற்றில் சில. இது பலசமயங்களில் நிரந்தரமான உடலியல் உபாதைகளுக்கும் வழிவகுக்கும்.
மருத்துவத் தேவைகளுக்கும் கல்வி, ஆய்வு, பாதுகாப்புத் தேவைகளுக்கும் இந்தத் தொழில்நுட்பம் அவசியமெனக் கருதினால், அதைத் தேவையா்ன இடங்களில் மிகவும் கவனமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில், மக்கள் அதிகம் வசிக்காத பகுதிகளில் மேற்கொள்ளவேண்டும்.
எனவே, பரிசோதனை எலிகளாக எம்மைப் பார்க்கின்ற, இந்த ஆபத்தான தொழில்நுட்பத் திணிப்பை எதிர்த்து அனைவரும் அணிதிரள்வோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## புலிகள்...

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
கன்னியாவில் அமைதிவழியில் போராடிய தமிழ் மக்கள் மீது சிங்களவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரச்சினைகளுக்குப் போராட்டம் என்ற பெயரில் அச்சுறுத்தல் விடுவிப்பதோ அல்லது வன்முறைகளில் இரு இனத்தவர்களும் இரு மதத்தவர்களும் ஈடுபடுவதோ அழகல்ல.
இந்த ஆட்சி இனக்கலவரத்துக்கும் மதக்கலவரத்துக்கும் தூபமிட்டுள்ளது. விரைவில் ஆட்சி மாற்றம் இடம்பெறும். பௌத்த தேரர்களின் பங்களிப்புடன் சிங்கள ஆட்சி விரைவில் மலரும். அந்த ஆட்சியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவின இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழும் நிலைமையை நாம் உருவாக்குவோம் - என்றார். (ஒ.5,22)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**Dr.S.K.எழில்வேந்தன்**

(Ph.D,SLEAS-III, SLPS I, M.Ed,Dip.in School Management, Dip.in.Edu,B.A(Hons)

**(அதிபர், யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)**

கல்வித்துறையில் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுச் சிறப்படைந்த எமது கல்லூரி முதல்வர் அவர்களை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம்.**



## நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானம்

**பூங்காவனத் திருவிழா 18.07.2019**


விசேட தவில் நாதஸ்வரக் கச்சேரி

மாலை 4.00 மணிக்கு இடம்பெறும்

| நாதஸ்வரக் கலைஞர்கள் | தவில் கலைஞர்கள் |
|---|---|
| நாதஸ்வர இளவரசு - தொல்புரம் வழக்கம்பரை **R.சிவகுமார்** | லயஞான குபேரபூபதி அளவையூர் தட்சணாமூர்த்தி அவர்களின் புதல்வர் **T.உதயசங்கர்** |
| நாதசங்கமம், நாதஸ்வர இன்குழல் வேந்தன் **V.K.P.குமரேசன் (குமரன்)** | லயஞான திலகம் - பருத்தித்துறை **M.S.சதீஸ்குமார் (குட்டி)** |
| நாதஸ்வர இளவேனில் - கோண்டாவில் **K.நாகதீபன்** | தவிலிசை ஞானவேந்தன் - மானிப்பாய் **N.பிரசன்னா** |

அதி சிறப்பு நிகழ்வாக இரவு 9.00 மணிக்கு
இந்தியாவில் இருந்து வருகைதரும் பிரபல
தென்னிந்தியத் திரைப்படப் பாடகர்
டாக்டர் பத்மஸ்ரீ T.M சௌந்தரராஜன் அவர்களின் புதல்வர்
T.M.S. செல்வக்குமார் மற்றும்
செல்வி பவித்திரா (இந்தியா)
கீபோட் கண்ணன் குழுவினர் (இந்தியா)
இணைந்து வழங்கும் இன்னிசைக் கச்சேரி
இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பூங்காவன உபயகாரர்,
சு.பீதாம்பரம் குடும்பத்தினர்



## வண்ணை. வீரமாகாளியம்மன் கோவில் மகோற்சவத்தில் 26 ஆம் நாள் பூங்காவனத் திருவிழா

## இன்று ( 17.07.2019 ) புதன்கிழமை

மாலை 6 மணிக்கு வசந்தமண்டபபூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மணிமண்டபத்தில் விசேட ஆராதனைகள் நடைபெற்று அதனைத்தொடர்ந்து விசேடமாக அமைக்கப்பட்ட மலர்பந்தலில் அம்பிகை வெளிவீதி உலா வரவுள்ளார். அனைத்துப் பக்தர்களும் அம்பிகையின் ஆசீர்வாதத்தை பெற்றருள்வீர்.

அதனைத் தொடர்ந்து **நாதஸ்வர இசைமணி**
**ஏழுநல்லூர் உதயசங்கர் குழுவினர் (சங்கர்)**

**கோண்டாவில் மேற்கு**

| நாதஸ்வர கலாசாகர இசைஞான பூபதி **ஜெ.சிவதாசன்** | இளம் தவில் இசை ஞானகுபேரன் **சி.சிவதாசன் ஹரிசன்** | இளம் நாதஸ்வரம் இசை சுரஞான இளவரசன் **சி.சிவதாசன் பவீதன்** |
|---|---|---|

**வட்டுக்கோட்டை**

| ராமநாதன் குழுவினர் **சீலன்** - தவில் | **இந்தியா - கேரளா கார்த்தி** - நாதஸ்வரம் | **இந்தியா** - பொள்ளாச்சி **சிவசங்கர்** - தவில் |
|---|---|---|

தேவன் சவுண்ட் பண்டத்தரிப்பு, பிரான்பற்று.
நவா ஒளியமைப்பு பண்டத்தரிப்பு.
விசேட மேடை அலங்காரம் : அழகர் அச்சுவேலி.

மணிமண்டபபூங்காவன உபயகாரர் :
**நியூராம் கன்செக்சன், HOTELLOVUSIYAH(PVT)LTD**

# தபால் தொழிற்சங்கம் 48 மணிப் போராட்டத்தில்

## குதித்தது ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம்

கொழும்பு, ஜூலை 17

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மாலை 4 மணி முதல் மத்திய தபால் பரிமாற்றகத்தின் சேவையிலிருந்து விலகியிருக்கும் அடையாளப் பணிப்புறக்கணிப்பை ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்தப் போராட்டம் நாளை 4 மணிவரை தொடரும் என்று ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் 11ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை 16 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பை அடுத்து. அரசால் கடந்த செப்ரெம்பர் மாதம் அமைச்சரவைக்கு சில பரிந்துரைகளை முன்வைக்கப்பட்டன. ஆனால் அது தொடர்பாக அமைச்சரவை அனுமதியை இதுவரை வழங்கவில்லை என ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று தம்து கோரிக்கைகளுக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று தொழிற்சங்கம் கோரியுள்ளது.

அரசு தமது அடையாளப் பணிப்புறக்கணிப்புத் தொடர்பில் செவிசாய்க்காவிடின், பிறிதொரு நாளில் அனைத்து ஊழியர்களையும் ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கும் தயாராகவுள்ளோம் என்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது என்று தொழிற்சங்கங்கள் தமக்கு அறிவித்துள்ளன என்றும், மத்திய தபால் பரிமாற்றகத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார். (எ-22)



தெல்லிப்பழை சந்திரமௌலீஸ்வர சிவன் ஆலய தீர்த்தக் கேணி அமைப்பதற்கான மண் அகழ்வு நிகழ்வு நேற்று இடம் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சோ.சேனாதிராசாவால், கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் கேணி அமைப்பதற்கு 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவர் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டார்.

# மகேஸ்வரனின் கொலைக்கு வழக்கு தொடர்ந்தால் விஜயகலாவே மாட்டுவார்

## இப்படிக் கூறுகிறார் தேவானந்தா எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுடைய கொலைக்கு சரியான தீர்வு கிடைக்க வில்லை என்று நினைத்தால் இப்போது இருப்பது விஜயகலாவின் (இராஜாங்க அமைச்சர்) அரசு, அவருடைய நீதிமன்றம், ஏன் மேலதிக நீதி மன்றத்துக்கு அவர் போகமுடியாது. இப்போது விஜயகலா நீதிமன்றம் போவதாக இருந்தால் நீதிமன்றம் திருப்பி தன்மீதும் (விஜயகலா) குற்றத்தைக் கொண்டுவந்துவிடும் என்று அவருக்குத் தெரியும். இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்சிறிதர்தியேட்டரில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஜயகலாவை நீங்கள் ஏன் விசயகலா என்று கூறுகின்றீர்கள் என ஒருவர் என்னிடம் கேட்டார். நான் விடயத்தோடுதான் அதைச் சொல்லுகின்றேன் என்றேன்.

அந்த விசயகலா ஒருமுறை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, தன்னுடைய கணவரைக் கொன்றவர் இந்த நாடாளுமன்றத்தில் இருக்கின்றார் என்றார். அவருடைய கணவரைக் கொல்வதற்கு இறுதியாகத் தகவல் வழங்கியவரும் இந்த நாடாளுமன்றத்தில் தான் இருக்கின்றார் என்று நான் பதில் சொன்னேன்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் மகேஸ்வரனுடைய கொலைக்கு சரியான தீர்வு கிடைக்க வில்லை என்று நினைத்தால், இப்போது இருப்பது விசயகலாவின் அரசு, அவருடைய நீதிமன்றம், ஏன் மேலதிக நீதிமன்றம் அங்கு போக முடியாது. இப்போது விசயகலா நீதிமன்றம் போவதாக இருந்தால் நூறுக்கு இருநூறு வீதம் அது நிரூபிக்க ப்படுவது மாத்திரமல்ல, நீதிமன்றம் தன்மீது குற்றத்தைத் திருப்பிக் கொண்டு வரும் என்று தெரியும்.

ஒரு விரலை நாங்கள் சுட்டினால் மற்றைய விரல்கள் எம்மை நோக்கியிருக்கும் என்பது உங்களுக்கு தெரியும். புங்குடு தீவில் பாடசாலை சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கு துணையாக யார் இருந்தது என்றெல்லாம் உங்களுக்குத் தெரியும். நீதிமன்றமே அப்போது அவரைக் கண்டித்துள்ளது. அவருடைய குற்றத்தைக் கண்டித்துள்ளது - என்றார். (ஒ.5.21)

# ருஹூணு பல்கலையின் பீடங்கள் மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 17

தற்காலிகமாக மூடப்பட் டுள்ள ருஹுணு பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகத்திலுள்ள பீடங்களை இன்று மீளத் திறப்பதற்குத் தீர்மா னிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுக்கிடையில்நேற்று முன்தினம் மாலை நடை பெற்ற கலந்துரை யாடலை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் அமைதி யின் மையுடன் செயற்பட்ட தோடு, பல்கலைக்கழகத்தின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்துள்ளனர். அதையடுத்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்க்ளின் பாது காப்பிற்காக வெல்ல மடம வளாகத்தின் அனைத்துப் பீடங்க ளும் கால வரைய றையின்றி மூடப்பட்டிருந்தன. (எ)

கேலிச்சித்திரம்




நன்றி அவந்தஆட்டிகல

# இராணுவத்தில் பணிபுரியவேண்டாம் பெண் சிப்பாய் மீது வவு. தாக்குதல்

வவுனியா, ஜூலை 17

இராணுவத்தில் பணிபுரிய வேண்டாம் என்று தெரிவித்து, பெண் இராணுவச் சிப்பாய் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த சிப்பாய் அவரைக் காப்பாற்றச் சென்ற சகோதரன் இருவரும் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா ஓமந்தை புதியவேலர் சின்னக்கு ளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இராணுவச் சிப்பாயின் வீட்டுக்குச் சென்ற அவரது அயல் வீட்டுக்காரர், இராணுவத்தில் பணிபுரிய வேண்டாம் என்று தாக்குதல் நடத்தியதாகவும், அதனைத் தடுக்கச் சென்ற சகோதரன் மீது தாக்குதல் நடத்தியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

வாளால் வெட்டியதாகக் கூறப்படும் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகத பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)

# வல்வெட்டித்துறை வாசி தமிழகத்தில் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வல்வெட்டித்துறையிலிருந்து படகுமூலம் வேதாரண்யம் சென்று அங்கிருந்து நாகை செல்லும்போது கள்ளிமேடு அருகே இந்திய கியூப் பிரிவு பொலிஸாரால், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பார்த்த சாரதி (வயது-40) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வேதாரண்யம் கடற்கரையை அடுத்த மணியன் தீவு கடற்கரைப் பகுதியில் படகு வேகமாகப் பயணிப்பதை தமிழக கடலோரப் பொலிஸார் அவதானித்துள்ளனர். கரையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் படகிலிருந்து ஒருவரை கடலுக்குள்ளே இறக்கி விட்டு விட்டு படகு சென்றுள்ளது.

படகில் இருந்து இறக்கி விடப்பட்டவர் ஒரு கிலோ மீற்றர் தூரம் நீந்தி மணியன்தீவு கடற்கரையை சென்றடைந்துள்ளார். அங்கிருந்து வேதாரண்யத்திலிருந்து பேரூந்து மூலம் நாகை செல்லும்போது கள்ளிமேடு அருகே கியூ பிரிவு பொலிஸார் அவரைப் பிடித்து விசாரணை நடத்தினர்.

1991 ஆம் ஆண்டு நாகை மாவட்டம் வேட்டைக்காரனிருப்பு இலங்கை ஏதிலிகள் முகாமிலிருந்தவர் என தெரிய வந்துள்ளது. (ஒ.5.105)

# அரச பணம் கிடைப்பதில் இழுபறி வீடமைக்கும் பணிகள் முடங்கின!

*வீடுகள் கட்டத் தொடங்கிய பயனாளிகள் கவலை; திறைசேரியிலிருந்து பணம் வரவில்லை என்கின்றார் அதிகாரி*

மன்னார், ஜூலை 17

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதியில் கட்டுமானம் ஆரம்பித்த வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்ய அரசிடமிருந்து பணம் கிடைக்காததால் வீடு அமைக்கும் வேலைகள் இழுபறிப்படுகின்றன என்று வீட்டுத்திட்டப் பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் மன்னாரில் பல இடங்களிலும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்தரை லட்சம் ரூபா தொடக்கம் ஏழரை லட்சம் ரூபா வரையும் இதன் பெறுமதி உள்ளது.

அத்திபாரம் வெட்டுவது முதற்கொண்டு கட்டம் கட்டமாக நிறைவு செய்யப்படும் வேலைகளுக்கு ஏற்றவாறு பிரதேச செயலகங்களால் பணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பணம் தருவது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் பிரதேச செயலகங்களுக்குச் சென்று கேட்கும்போது உரிய திணைக்களங்களில் இருந்து தமக்கு நிதி வரவில்லை என்றும் கூறுகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

பகுதி பகுதியாகச் செய்ய வேண்டிய வேலைகளுக்கு எம்மிடம் பெருந்தொகையான பணம் இல்லை. கல், மணல், சிமெந்து உட்பட கட்டட வேலைகளுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் கடன் அடிப்படையில் பெற்று அரசு பணம் தந்ததும் கடன்களைத் திருப்பிக் கொடுத்து வந்தோம்.


ஆனால் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வீட்டுத்திட்டங்களுக்கான பணம் கிடைக்காதபடியால் கடன் கொடுத்தவர்கள் எம்மை நெருக்குகிறார்கள். இந்த வீட்டுத்திட்டங் களைத் தராமல் விட்டிருந் தால் கடன் தொல்லை இல்லாமல் நிம்மதியாக இருந்திருப்போம்.

தற்போது மன உளைச்சலுக்கு உட்பட்டிருக்கின்றோம் என்றும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இது தொடர்பாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது:

"மக்களின் இந்த நிலைமை எமக்கும் கவலை அளிக்கிறது. இதற்கான முழுக் காரணம் திறைசேரியில் இருந்து பணம் வருவது தாமதமாவதுதான். தலைமைக்காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை வீடமைப்பு அமைச்சருடன் சிறப்புக் கூட்டமொன்று நடைபெற்றது. இதில் 25 மாவட்டங்களைச் சேர்ந்த முகாமையாளர்களும் பங்குப் பற்றியிருந்தார்கள். இதில் ஏழு லட்சம் ரூபாவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான முழுப் பணமும் அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் அனைத்துத் தரவுகளும் முழுமையாக அனுப்பப்பட்டுள்ளது.

அமைச்சரால் முயற்சிகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறன. மிக விரைவில் வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான முழுப்பணமும் வழங்கப்படும்" - என்றார். (த-213)





வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர் ஆலய தேர்த்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. அடியார்கள் அங்கபிரதட்சனை மற்றும் செடில் காவடி, தூக்கு காவடி ஆகிய நேற்றிக்கடன்களை நிறைவேற்றினர். (ஐ)

## அலங்கார உற்சவம்

அளவெட்டி, ஜூலை 17

யாழ்ப்பாணம் அராலி மத்தி குமுக்கம் குளம் நாச்சிமார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 9 நாள்கள் பூசைகள் இடம்பெற்று இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு பொங்கல் பூஜைகள் இடம்பெற்று மகேஸ்வர பூஜை இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-63)

# பாடசாலையை மூடுவதற்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஜூலை 17



வவுனியா நெடுங்கேணிப் பட்டடை பிரிந்தகுளம் பாடசாலையை மூடுவதற்கு எடுத்த முயற்சியைத் தடுத்து நிறுத்தகோரி பொதுமக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து, அந்தப் பாடசாலையிலிருந்த பொருள்களை வெளியே கொண்டுசெல்லும் நடவடிக்கை கைவிடப்பட்டது.

1965 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருகின்றது. போர் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த பின்னர் இந்தப் பாடசாலையின் மாணவர் வரவு குறைந்தளவாகக் காணப்பட்டது. அதனால் பாடசா[illegible]தமிழ் கலவன் பாடசாலையுடன் இணைப்புச் செய்வதற்கு மாகாணக் கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க வவுனியா வடக்கு கல்வி வலயத்தால் நேற்று முன்தினம் நெடுங்கேணிக் கோட்டக்கல்வி அதிகாரி கிரு[illegible]பானந்த ராஜா பாடசாலைக்குச் சென்றுள்ளார். அதன் போதே மக்கள் அவரை இடைமறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்துப் பாடசாலையின் உபகரணங்கள் ஏற்றும் நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மாகாண சபைமுன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், நெடுங்கேணி பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (த)

# வன்முறைகளுக்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்டவர்

பத்திநாதனின் மறைவுக்கு 'புளொட்' இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

இலங்கையில் திட்டமிட்டவகையில் மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குதல்களுக்கும், இன ரீதியான வன்முறைகளுக்கும் எதிராக தீவிரமாக செயற்பட்டவர் அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன். அவரின் இழப்பால் துயரடைகின்றோம் என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இரங்கல் தெரிவித்துள்ளது. இது பற்றி கட்சி அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன் கடந்த வியாழக்கிழமை இயற்கை எய்தினார். இன ரீதியான வன்முறையால் பாதிக்கப்பட்ட மலையக மக்களை காந்தீயம் அமைப்பின் மூலமாக வடக்கு கிழக்கில் குடியேற்றுவதில் மிகவும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றியவர்.

அனைத்து விடுதலைப் போராட்ட இயக்கங்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி, தமிழ் மக்களுடைய முழுமையான விடுதலைக்காக தன்னுடைய அர்ப்பணிப்பான சேவையை ஆற்றிவந்தார் - என்றுள்ளது. (த)

# அருட்தந்தை பத்திநாதரின் மறைவு தமிழருக்குப் பேரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17



இறைபதம் அடைந்த அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் போர்க் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணிகளை நினைவு கூறுவோமாயின் அவரது இழப்பு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் சார்பில் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிய அனுதாபக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தனது வாழ்நாளில் இனிமையாகவும், எளிமையாகவும் மக்களை நேசித்து வாழ்ந்தவர். மத வேறுபாடுகளின்றி மக்கள் பணியாற்றியவர். லட்சக்கணக்கான மக்கள் அவரை நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றார்கள். போர்க் காலகட்டத்தில் இவர் பலத்த காயமடைந்திருந்தார். எனினும் மக்களுக்கு ஆற்றிய சேவையை மக்கள் அறிவார்கள் தன்னலம் கருதாது ஆன்மிகத்துடனான அடையாளம் மிக்க சேவையை மக்களுக்கு வழங்கியிருந்தார். விடுதலைப்புலிகளின் இறுதிக் கட்டப் போரில் குண்டுத் தாக்குதல்களின் மத்தியில் தனது உயிரையும் பொருட்படுத்தாது மக்களைக் காப்பாற்றுவதற்காகச் செயல்பட்டார் - என்றுள்ளது. (த)



# 245 இந்து நிறுவனங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா நிதி

*யாழ்ப்பாணத்தில் அமைச்சர் மனோ வழங்கினார்*

கொடிகாமம், ஜூலை 17

வடக்கில் தெரிவு செய்யப்பட்ட இந்துக் கோவில்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் என 235 நிறுவனங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசனின் வழிகாட்டலில் இந்து ஆலயங்கள், இந்து அறநெறிப் படசாலைகள் என்பவற்றை வலுப்படுத்தும் தெய்வீகச் சேவைத் திட்டத்தின் ஊடாக நிதி வழங்கப்பட்டது.

நிதி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை முற்பகல் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சைவப் பெரியார்கள், கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சி.சிறீதரன், இ.அங்கஜன், வேலுகுமார், அமைச்சின் மேலதிக செயலர் ரவீந்திரன், இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-159,105,ரி1)

# ரணிலின் பயணத்தை எதிர்த்துப் போராட்டம்

## வவுனியாவில் நடத்தப்பட்டது




வவுனியா, ஜூலை 17


ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு நோக்கிய பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை போராட்டத்தில் ஈடுபட்டனர். சிலர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"எங்களுக்குவடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட முழுமையான கூட்டாட்சியே தேவை, உங்கள் ஏக்கிய ராஜ்யவை குப்பையில் போடுங்கள். ரணிலே எங்கள் தமிழர் தாயகத்தை வெளியேறு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் சென்றிருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வவுனியா உறவுகள் இன்று 879ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (த)



# உலகத் தமிழர் ஒவ்வொருவருமே ஒருகுளத்தை சீரமைக்கவேண்டும்

*நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,ஜூலை 17

உலக தமிழ் உறவுகள் ஒவ்வொருவரும் ஒரு குளத்தை சீரமைப்புச் செய்தால் குடி தண்ணீர் இன்றி இடம் பெறும் இடப்பெயர்வையும், எமது இருப்பையும் தக்க வைத்து கொள்ளலாம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

காரைநகர் கருங்காலிப் பிரதேசத்தில் வேரக்குளம் மற்றும் சலவைக் குளம் ஆகியன தூர் வாரப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக, காரைநகர் பிரதேசத்தின் தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்த்து பசுமைமிக்க பிரதேசமாக மாற்றியமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுத் தற்போது வெற்றியளித்துள்ளது.

காரைநகர்பிரதேசத்தில் 20க்கும் மேற்பட்ட பொதுக்கிணறுகள் சீரமைக்கப்பட்டதுடன் பொதுக் கேணிகள் மற்றும் ஆலய கேணிகளும் துப்புரவு செய்யப்பட்டு குடிதண்ணீர்த் தேவை நிறைவு செய்யப்பட்டுள்ளது. உவர் நீரைத் தடுப்பதற்கு நன்னீர்த் தடுப்பணைகளை ஏற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தூர் வாரப்பட வேண்டிய குளங்களின் தரவுகள் காணப்படுவதால் உலகத்தமிழ் உறவுகள் ஒவ்வொருவரும் ஒரு குளத்தை சீரமைப்புச் செய்ய முன்வரவேண்டும் - என்றார். (ஜ-105)



கிளிநொச்சி பூநகரி பத்தினிகாட்டு வரசித்தி விநாயகர் ஆலய படிப்பகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நொதேண் விளையாட்டுக் கழக கல்வியங்காடு நல்லூர் நண்பர்கள் அமைப்பின் அமைப்பாளர் ப.மணிவண்ணன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஜ-222)

# வெடிப்பொருளைக் கையாண்டவர் முகமாலையில் கையை இழந்தார்

பளை, ஜூலை 17

வெடிப் பொருளைக் கையாண்டவர் அது வெடித்ததில் முழங்கை வரையான பகுதியை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முகமாலை வடக்கு பொந்தர் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த ராதா பிரதீப் (வயது - 28) என்பவரே ்கையை இழந்தார்.

அயலில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதியில் இரும்புத் துண்டுகள் பொறுக்கச் சென்று அங்கு காணப்பட்ட வெடிப் பொருளை எடுத்துவந்து அதனுள் காணப்பட்ட வெடி மருந்தை எடுப்பதற்காகக் கழற்றியபோது அது வெடித்தது என்றும் முழங்கை வரை இழந்துள்ளார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

கடந்த வருடம் இதே இடத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் இரும்பு சேகரிக்கச் சென்றபோது கண்டெடுத்த வெடிப் பொருளை அடித்தபோது அது வெடித்ததில் காலை இழந்திருந்தார். (த-9)

## கோத்தபாய முகாமிலுள்ள

# பொதுமக்களின் கால்நடைகளை எவராலுமே பிடிக்கமுடியவில்லை

## உரியவர்கள் பிடிப்பார்களாயின் உதவத் தயார் என்று மாவட்டச் செயலர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

முல்லைத்தீவு கோத்தபாய முகாமில் உள்ள கால்நடைகளை ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கும் மக்களின் வேண்டுகோளுக்குப் படையினர் தடையாக இருக்கவில்லை. மாறாக அவற்றை உரியவர்களால் கூடப்பிடிக்கமுடியவில்லை. அவர்கள்பிடிப்பார்களாயின் அதற்கு உதவத் தயாராகவுள்ளேன் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வட்டுவாகல் கடற்படை முகாமுக்குள் நிற்கும் 250 கால்நடைகளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு விடுக்கப்படும் அந்தப் பகுதி மக்களின் கோரிக்கை தொடர்பில் மாவட்டச் செயலரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட்டுவாகல் கடற்படை முகாமுக்குள் நிற்கும் கால்நடைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று 2016ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பில் கடற்படையினருடன் பிரத்தியேகமாகவும் உரையாடப்பட்டது. அதன்போது குறித்த முகாம் பொறுப்பதிகாரி தனது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு அந்த மாடுகளைப் பிடிக்க இணக்கம் தெரிவித்தார்.

இதனால் குறித்த கால்நடைகளை முகாமுக்குச் சென்று பிடித்து வருவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றன.

இதனையடுத்து கால்நடை உரிமையாளர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளையும் பட்டிக் குறிகளையும் குறித்துக் கொள்ளுமாறும் கோரப்பட்டனர். இதன்போது சிலரே முன்வந்து பதிவுகளை மேற்கொண்டனர். அதன் பிரகாரம் குறித்த முகாமுக்கு எமது செயலக அதிகாரியும் கிராமஅலுவலர் மற்றும் சில கால் நடை உரிமையாளர்களும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அவ்வாறு பார்வையிட்டதன் பிரகாரம் எம்மிடம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் சுமார் 100 மாடுகளாகவே அங்கு காணப்பட்டன. எனினும், முகாமினுள் 300 தொடக்கம் 350 வரையான மாடுகள் நிற்கின்றமை உறுதி செய்யப்பட்டது.

அத்துடன் அவை வட்டுவாகல் மற்றும் முல்லைத்தீவு பிரதேச மக்களினுடையவையன்றி புதுக்குடியிருப்பு மக்களுக்குச் சொந்தமான மாடுகளும் இனம் காணப்பட்டுள்ளன. அவற்றை ஒரே நாளில் அல்லது இரண்டு நாள்களில் முகாமுக்குள் இருந்து வெளியேற்றுமாறு கடற்படையினர் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த முகாமினுள் உள்ள கால் நடைகளின் எண்ணிக்கைகள் தொடர்பில் உறுதியான தகவல் தெரியாது. இருந்தபோதும் அவை தொடர்பில் போதிய நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கடற்படைத் தளபதி மக்களின் கால்நடைகளை மக்களிடம் வழங்கமுன்வந்தமையால் அவற்றைப் பார்வையிடும் சந்தர்ப்பம் முதல் தடவையாக 2016ஆம் ஆண்டு கிட்டியது. எனவே இவை அனைத்தையும் உடனடியாக உரியவர்களிடம் வழங்கும் வகையில் மாடுகளைப் பிடிக்கும் 9 நாள் முயற்சி யில் 11 மாடுகள் மட்டுமே பிடிக்கப்பட்டன. நீண்டகால அனுபவம் மிக்க மாடுகளைப் பிடிப்பவர்களே அந்த மாடுகளைப் பார்த்துப் பயந்தனர். அதன் உரிமையாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு மீண்டும் கோரிக்கைவிடுத்துதம்மால் பிடிக்க முடியும் எனத் தெரிவித்தால்மீண்டும்முயற்சிக்கலாம் - என்றார். (த-105)



# 40 மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு

கொடிகாமம், ஜூலை 17

தென்மராட்சி வரணிப் பிரதேசத்தில் போக்குவரத்துத் தேவையுடைய 40 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வரணி கலாசார மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

வரணிப் பிரதேசத்தின் 8 கிராம ஆலுவலகர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி, நாவற்காடு, குடமியன், வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே ஈருருளிகள் வழங்கப்பட்டன.

லண்டன் வரணி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு, தென்மராட்சி கல்வி வலய பதில் வலயக் கல்விப்பணிப்பாளார் த. கிருபாகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் செ. சந்திரசேகரம்,

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய முதன்மைக் குரு இராமலிங்கம் ஐயர் குமாரசாமிக் குருக்கள், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் வே.நாகதேவன்,கிராம அலுவலர்கள்,வரணி ஒன்றிய உறுப்பினர்கள்,பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-159)

## ஈ.ரோஸ் போராளிகளின் நினைவு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், ஜூலை 17
ஈழ விடுதலைப் போராட்டத்தில் இன்னுயிர்களை மண்ணின் விடுதலைக்காக கொடுத்த ஈரோஸ் போராளிகளை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியாவில் அமைந்துள்ள இன்னுயிர் ஈத்தோர் நினைவுப் பூங்காவில் நடைபெறவுள்ளது.
இந்த நினைவேந்தல் நிகழ்வில் விடுதலை அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் இன்னுயிர் ஈத்தோர் குடும்பத்தினர் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

# பொய் வழக்குகள் பதிவுசெய்து மக்களைச் சீர்குலைக்காதீர்கள்

## பொலிஸாரிடம் சிவமோகன் எம்.பி. வேண்டுகோள்

மன்னார், ஜூலை 17
பொதுமக்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொருளாதாரச் சிக்கல்களையும் மன ரீதியான உளைச்சல்களையும் கொடுக்காதீர்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வவுனியாவடக்குபுதுக்குளம் பண்டிதமணி கணபதிப்பிள்ளை தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கிராம எழுச்சித்திட்ட நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாவில் அதனை அமைத்திருந்தார். அதனைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:
கனகராயன் குளம் கரப்புக்குத்திப் பகுதியில் பொலிஸாரின் அராஜகச் செயற்பாடு தொடர்பாக தொடர்ச்சியாக மக்கள் எம்மிடம் முறைப்பாடு செய்கின்றார்கள்.
கரப்புக்குத்திப் பகுதியில் வேறு தேவைகளுக்குச் சென்றாலும் பொலிஸார் சவள்களை உழவியந்திரப் பெட்டிக்குள் போட்டுவிட்டு மணல் அள்ளினார்கள் என்று வழக்குத்தாக்கல் செய்து விடுகிறார்கள்.
அந்த உழவியந்திரங்களை வெளியில் எடுப்பதற்காக உழவியந்திர உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொள்கிறார்கள்.
குற்றத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் வழக்கு நிறைவு பெற்று தீர்ப்பு வரும் வரை வாகனங்கள்நீதிமன்றங்களில் தடுத்து வைக்கப்படுகின்றன.
எனவே இவ்வாறான பிழையான நடைமுறைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமன்றி, மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் அத்திவாரம் வெட்டியுள்ளார்கள். அவர்கள் மரம் வெட்டினர் என்று குற்றஞ்சாட்டிப் பொலிஸார் வழக்குகள்தாக்கல்செய்துள்ளார்கள்.
இப்படிப் பொய் வழக்குகளைப் பதிவுசெய்வதன் மூலமாக எமது மக்களை அடக்கு முறைக்குள் வைத்திருக்கவே இந்த அரசு விரும்புகிறது என்பது தெளிவாகிறது.
இவ்வாறான விடயங்கள் உடனுக்குடன் வெளிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் உரிய அதிகாரிகளுடன் பேசி இதற்கான தீர்வுகளை எம்மால் பெற்றுத்தர முடியும் - என்றார். (த-213)

## நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17
நமது ஈழநாடு நாளிதழின் முன்னாள் ஆசிரியர் கலாநிதி சி.ரகுராமால் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கருத்தரங்க மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

## சஜித் மனைவி கருத்துக்கு சிங்கள ராவய எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 17
பிரிட்டனின் எலிசபெத் மகாராணி கூட இவ்வாறு செயற்பட்டிருக்க மாட்டார். தன்னை நாட்டின் தலைவரின் மனைவி எனக் கூறிக் கொள்ளும் இவரின் நடவடிக்கை எங்கு போய் முடியுமோ தெரியாது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலர் மாகல்கந்தே சுதந்த தேரர்.
அமைச்சர் சஜித் பிரேமதாசவின் மனைவி ஜலனி பிரேமதாச அண்மையில் மகளிர் கூட்டமொன்றில் கலந்துகொண்டு, "நான் நாட்டினுடைய எதிர்காலத் தலைவரின் மனைவி" எனக் கூறுயிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இப்பொழுது தெரிவு செய்ய வேண்டியுள்ளது அரச தலைவரை அல்ல, அவரது மனைவியையே. இவர்கள் அரசியல் பைத்தியம் பிடித்தவர் எனவும் தேரர் கடுமையாகச் சாடியுள்ளார். (எ)

# ரூ.50 மில். பெற்றுக்கொண்டதால்தான் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லையா?

## கேள்விக்கு உரிய பதில் வழங்காது சாட்டுப்போக்குக் கூறினார் ஆனந்தன் எம்.பி.

வவுனியா, ஜூலை 17
ரணில் விக்கிரமசிங்க அரசையும் கூட்டமைப்பினரையும் கடுமையாக விமர்சித்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு 50 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. அதற்காகத்தான் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ரணில் அரசுக்கு எதிராக வாக்களிக்காது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது விட்டீர்களா? என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு. சிவசக்தி ஆனந்தன் உரிய பதிலளிக்காது வேறு காரணங்கள் கூறிச் சமாளித்துள்ளர்.
வீதி சீரமைப்புக்கு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சு 50 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது.
வவுனியாவில் அண்மையில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் அவரிடம் ஊடகவியலாளர் கேள்வியெழுப்பினார். அதற்கே அவர் உரிய பதிலளிக்காது சாட்டுப்போக்குச் சொல்லியுள்ளார்.
மேற்குறித்த கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு:
இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் கபீர் காசிம் எனக்கு நேரடியாக ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில், வவுனியா மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் சீரமைப்புச் செய்ய வேண்டிய வீதிகள் சம்பந்தமான விவரங்களைத் தருமாறு கோரி இருந்தார்.
அவர் எனக்கு மட்டுமல்ல கூட்டமைப்பில் இருக்கக் கூடிய ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியது போல் சில வேளைகளில் நானும் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்றேன் என்ற நம்பிக்கையில் அனுப்பினாரோ தெரியவில்லை.
அவர் அனுப்பிய கடிதத்துக்கு திருத்தம் செய்ய வேண்டிய சில வீதிகளின் விவரங்களை அனுப்பியுள்ளேன். அது அனுமதிக்கப்படுமா? நிதி வருமா? வராதா? என்பது எனக்குத் தெரியாது. வீதி விவரங்கள் கொடுத்ததற்காக, கூட்டமைப்பு அரசைப் பாதுகாத்தது மாதிரி எந்த சந்தர்ப்பத்திலும் நான் பாதுகாக்கிற வேலைக்குப் போகவில்லை.
அமைச்சருடைய நிதி கிடைக்குமாக இருந்தால் நான் கொடுத்திருந்த வீதிகள் சீரமைக்கப்படும் - என்றார்.
எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறித்த நிதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வன்னித் தேர்தல் மாவட்டத்தின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதனின் உதவியைக் கோரியிருந்தார். அதன்பிரகாரம் சார்ள்ஸ் நிர்மலநாதன் சிவசக்தி ஆனந்தனை நெடுஞ்சாலைகள் அமைச்சின் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று உரிய அதிகாரிகளிடம் உரையாடி 50 மில்லியன் ரூபாவுக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவ்வாறு பெற்றுக்கொடுத்தது உண்மைதான் என்பதைக் கூட்டமைப்பினர் உறுதிப்படுத்தினர். (த-105)



வவுனியா குருமன்காடு சிறிவிநாயகர் ஆலய வருடாந்தத் தேர்திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாக இடம்பெற்றது. இதன்போது அடியார்கள் அங்கபிரதட்சனை, மற்றும் கற்பூர சட்டி என்பவற்றை ஏந்தி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். (ஐ)

### எழுதுமட்டுவாழ் தெற்கில் அமைக்கப்பட்ட

# ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து பொதுமக்களின் பாவனைக்கு விடவும்

## கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 17
தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நான்கு மாதங்களாகியும் இதுவரை திறந்து பொதுமக்களின் பாவனைக்கு விடப்படாதமை குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.
எழுதுமட்டுவாழ், கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் போன்றோர் பிரிவுகளில் நிரந்தரக் கட்டடமில்லாததால் வேறு இடங்களுக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர்.
நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு காணி வழங்கப்படுமாயின் கட்டடம் அமைத்து வழங்குவதாக சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.
இதனையடுத்து சாவகச்சேரி பிரதேச சபையின் வட்டார உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஏ 9 முதன்மை வீதியுடன் இணைந்த காணித்துண்டினை புலம் பெயர் நாட்டில் வதியும் குடும்பத்தினர் முன்வந்து காணிக்கான உறுதியையும் வழங்கியிருந்தனர்.
கட்டடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு கடந்த வருடம் தென்மராட்சி பிரதேச உதவிப் பிரதேச செயலர் செல்வி க.வினோஜிதாவால் அடிக்கல் நடப்பட்டு கட்டட வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன.
கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை கட்டடம் பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்படாததால் எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், ஒட்டுவெளி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார் போன்றவர்கள் தொடர்ந்தும் வேறு இடங்களுக்கு சிகிச்சை பெறச் செல்கின்றனர்.
எனவே கட்டடத்தைத் திறந்து பொதுமக்களின் பாவனைக்கு வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ஐ-9)

# முன்பள்ளி சிறார்களின் கலை, கலாசார நிகழ்வுகள்

வவுனியா, ஜூலை 17
வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 14 முன்பள்ளி சிறார்களின் கலை கலாசார நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.
சிறார்களின் கலை ஆர்வத்தை ஊக்குவிக்கும் முகமாக மகளிர் சிறுவர் அலுவல்கள் அபிவிருத்தி அமைச்சால் முன் பிள்ளை பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பான தேசிய வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
இந்த வாரத்தில் சிறார்களின் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் க. பரந்தாமன் தலைமையில் 14 முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் இ. இராஜேஸ்வரன் கலந்துகொண்டார். (ஐ-222)

# படையினர் அமைத்த தடுப்பணையை அகற்றாவிடில் போராட்டம் நடத்துவோம்

## விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன

*யாழ்ப்பாணம், ஜூலை 17*

*வவுனியா மாவட்டத்தில் போர்க் காலத்தில் படையினர் அமைத்த 22 கிலோமீற்றர் நீளமான மண் தடுப்பணையை அகற்றி மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப செப்பனிட 15 மில்லியன் ரூபா தேவையென்று மாவட்டச் செயலகம் மதிப்பிட்டிருந்தது. அதற்கான தொகை கோரப்பட்டு 3 ஆண்டுகளாகியும் நிதி கிடைக்கவில்லை. அதனால் அடுத்த கட்டமாக மக்கள் போராட்டம் நடத்துவது பற்றிச் சிந்திக்கின்றனர் என்று அங்குள்ள விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.*

மண் தடுப்பணைகள் உள்ளமையால் பெருமளவு விவசாய நிலங்கள் பயன்படுத்த முடியாத நிலையிலேயே உள்ளன. தடுப்பணைகளை அகற்றி மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ப அவற்றைச் செப்பனிட்டுத் தருமாறு விவசாயிகள் நீண்டகாலமாக மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

2016ஆம் ஆண்டு வவுனியாவுக்கு வந்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

அதற்கான செலவு மதிப்பீடு கோரப்பட்டது. அதற்குப் 15 மில்லியன் ரூபா தேவையென்று 2016இல் மாவட்டச் செயலகத்தால் மதிப்பிடப்பட்டு அதன் செலவு மதிப்பீடுகளை பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்தனர்.

இருப்பினும் தடுப்பணைகளை அகற்றித் தரவில்லை என்று மாவட்ட விவசாயி கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் கேட்டபோது, குறித்த விடயம் தொடர்புபட்ட அமைச்சின் கவனத்துக்குப் பல தடவை கொண்டு செல்லப்பட்டது. பணம் கிடைக்கவில்லை. தற்போதைய நிலையில் தடுப்பணையை அகற்ற 20 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளாக எமது விளை நிலங்கள் எந்தவித பயன்பாடும் இன்றி இருப்பதற்கு மாவட்டச் செயலகத்தின் அசமந்தப்போக்கே காரணம் என விவசாயிகள் கருதுகின்றனர்.

இதன் காரணமாகவே மக்கள் போராட்டத்தை மாவட்டச் செயலகம் முன்பாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்று விவசாய அமைப்பினர் தெரிவித்தனர். (த-105)

# சாவகச்சேரியில் சுகாதார மேம்பாட்டு மாதிரிக் கிராமங்கள் தெரிவு

கொடிகாமம், ஜூலை 17

சுகாதார மேம்பாட்டுக் கிராமத்தை உருவாக்கும் நோக்குடன் மந்துவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள மீசாலை வடக்கு, இராமாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் மாதிரிக் கிராமங்களாக தெரிவு செய்யப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மேற்படி கிராமங்களிலுள்ள சுகாதாரப் பிரச்சினைகள் இனங்கண்டு அவற்றுக்கான காரணத்தை பகுப்பாய்வு செய்து, பிரதேச மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஆரம்பக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் மீசாலை வடக்கு சுடர் ஒளி சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி க.தயாளன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வளவாளர்களாக வடக்கு மாகாண சமுதாய மருத்துவ நிபுணர் சு.சிவகணேஷ், யாழ்ப்பாண மாவட்ட சுகநல கல்வி அலுவலர்களான இ.ஈஸ்வரன், அ.ஜெயபாலன் ஆகியோரும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ பணிமனையின் மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.சுகன்யா, குடும்பநல அலுவலர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

“உணவுப் பழக்கங்கள் மாறிவிட்டன தற்போது எல்லோர் வீட்டிலும் ஈருருளிகள் இல்லை உந்துருளிகள் தான் அதிகமாகவுள்ளன. இதனால் உடற்பயிற்சி இல்லை தொற்றா நோய்களே அதிகம் ஏற்படுகிறது இது தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

உணவுப் பழக்க வழக்கம் முக்கியம் அதனை ஆரம்பத்தில் இருந்தே முன்பள்ளி சிறார்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். பருவ காலத்தில் இயற்கையாகக் கிடைக்கும் பழங்களை பிள்ளைகளுக்கு வழங்கி அவர்களின் ஆரோக்கியத்தில் அக்கறையுடன் ஒவ்வொரு பெற்றோர்களும் செயற்பட வேண்டும்.” போன்ற கருத்துக்களை வளவாளர்களால் வழங்கப்பட்டது. (ஐ-159)



# போலி நாணயத்தாள் வைத்திருந்தாரென ஒருவர் கைது

யாழ்ப்பாணம் ,ஜூலை 17

5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கடை உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாண நகரில் வைத்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பெருமாள் கோவில் பகுதியில் கடை வைத்திருக்கும் இவரிடம், யாரோ சாமான் வாங்கியுள்ளனர்.

அந்த காசை எடுத்துக் கொண்டு நேற்றுமுன்தினம் இரவு கஸ்தூரியார் வீதியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் அடித்து விட்டு, பணத்தை கொடுத்த போது, எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கள்ள நோட்டு என தெரிவித்ததுடன், பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அந்த தகவலின் பிரகாரம், கடை உரிமையாளரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்த நபரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-106)

# வெளிநாடு செல்லவுள்ள மாணவரே வாள்வெட்டுக்களில் ஈடுபடுகின்றனர்

## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இப்படிக் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வெளிநாடுகளுக்குச் செல்ல இருக்கும் பல மாணவர்கள் தான் வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வெளிநாட்டுப்பணம் வருகின்றது. வெளியே செல்ல வாய்ப்பும் கிடைக்கின்றது. வெளியே செல்லும் வரையில் பலவிதமான தப்பான காரியங்களில் எமது இளைஞர்கள் ஈடுபடுகின்றனர் என்று அறிகின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வலிகாமம் சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கு அருகிலுள்ள வெண்கரம் பிரத்தியேக கல்வி நிலையத்தில் மாணவக் கல்வி வழிகாட்டல் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வெண்கரம் அமைப்பு மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி இணைந்து இதை நடத்தியது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

### நீங்கள் வெளியேறினால் வேற்றினத்தவர் வந்துவிடுவர்

இன்றைய காலகட்டத்தில் எந்த வழியிலாவது பணத்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற அவாவில் தாங்களே தங்களது பிள்ளைகளைப் பலிக்கடாக்களாக மாற்றுவதைப் பற்றிப் பல பெற்றோர்கள் சிந்திப்பதில்லை. இது போர்க் காலம் இல்லை. வழமை நிலை திரும்பியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் மீண்டும் எம்மவர் வெளிநாடு செல்ல வேண்டுமா என்று கேள்வி எழுகின்றது. எல்லோரும் வெளியேறத் தலைப்பட்டால் வேற்று இனத்தவர்கள் வந்து இங்கு குடியேறுவதை நாம் எப்படித் தடுக்க முடியும்?

எமது மக்கள் இங்கு நிலைத்து நின்று சாதிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். பல நெருக்கடியான காலங்களில்கூட தமது ஒழுக்க நிலைகளில் இருந்து பின்வாங்காத எமது சமூகம் தற்போது பலவிதமான சீரழிவுகளுக்கு உட்பட்டிருப்பது மன வருத்தம் தருகின்றது. இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டும். மாணவர்களிடையேயும் பெற்றோர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம்.

### சிந்தனைகளை சிதறவிடாதீர்கள்

எனவே இளையோரின் சிந்தனைகள் சிதறிவிடப்படாமல் பாதுகாப்பதற்கு அவர்கள் அதிகளவு நேரங்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பது பழமொழி. ஆனால் கூடுதலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உயர்கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கு அவர்களின் பொருளாதார நிலமைகள் இடையூறாகக் காணப்படுகின்றது. இதனால் அவர்கள் தமது பிள்ளைகளைப் பற்றிய கல்வி ரீதியான விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முடியாது அல்லல் படுகின்றனர். பிள்ளைகளும் ஏனோ தானோ என்று வளர்ந்து வருகின்றார்கள்.

கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட வயதில் வழங்கப்பட வேண்டியதொன்று. இளமையிற் கல் என்றார் ஔவையார். காலம் தப்பிக் கற்பவர்கள் வெகு சிரமப்பட்டே தமது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்கின்றனர்.

### வாசிப்பில் ஈடுபடுங்கள்

ஆகவே தான் நான் கூறுகின்றேன் நீங்கள் இயலக் கூடிய அளவு வாசிப்புக்காக நேரத்தை ஒதுக்குங்கள். வாசிப்பில் ஈடுபட உங்கள் மொழி அறிவு விருத்தியடையும். பல் அறிவும் மேம்படும். எமது காலத்தில் ஆங்கில மொழிக் கல்வி வழக்கில் இருந்ததால் நாம் ஆங்கில மொழியை இலகுவாகக் கற்றுக் கொண்டோம். உங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் முறையாகக் கிடைக்கவில்லை.

ஆகவே எங்கள் மாணவர்கள் முதலாவதாக மொழி அறிவைத் தேடிக் கொள்ளவேண்டும். அடுத்ததாகத் தமது கல்விக்காக சரியான துறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் தேர்ந்தெடுக்கின்ற துறையினூடாக ஓய்வு பெற்ற பின்பும் கடமையாற்றக் கூடிய தொழில்களைத் தேர்ந்தெடுக்கலாம். என்ன தொழிலாக இருந்தாலும் அதில் ஒரு பற்றுதியும் முயற்சியும் தேவை.

இலங்கையைப் பொறுத்தவரையில் க.பொ.த உயர்தர பரீட்சையே எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றது. அந்த இரண்டு வருடங்களும் உங்களை வருத்தி உழைப்பீர்களாயின் உங்கள் எதிர்காலம் வளமானதாக அமையும். போன கால நேரம் திரும்பவும் வராது - என்றார். (த)



# மீனவர்களின் வாழ்வாதாரங்களை கொழும்பு போட்சிட்டி சிதைக்கிறது

## மன்னாரில் சுவரொட்டிகள்

மன்னார், ஜூலை 17

கொழும்பில் அமைக்கப்படும் 'போட்சிட்டி' மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கிறது என்று தெரிவிக்கும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், அதற்குக் கடும் எதிர்ப்புத்தெரிவித்து மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டியுள்ளது.

சுவரொட்டியில், 'இலங்கையை சீனாவின் காலணித்துவ நாடாக மாற்றும் போட்சிட்டி தேவையா? சிறு மீனவரைப் பாதுகாக்கின்ற நிலையான மீன்பிடிக் கொள்கை ஒன்றை உடனடியாக உருவாக்கு, மீனைப் பாதுகாக்கின்ற பலமான சமூகப் பாதுகாப்பு செயல் முறை ஒன்றை துரிதமாக உருவாக்கு' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்டக் கிளையினர் தெரிவித்ததாவது:

இந்த போட்சிட்டியால் இலங்கையின் வரைபடம் மாறியுள்ளது. அந்தப் பகுதி சீன அரசுக்கு 99 வருடங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதனால் இலங்கையர் எவரும் நன்மையடையப் போவதில்லை. காலி முகத்திடல் சில வருடங்களில் முற்றுமுழுதாக சீனர்களின் ஆதிக்கம் நிறைந்த பகுதியாகவே காணப்படும். இதனால் மீனவர்கள் தான் பெரிதும் பாதிப்படைகிறார்கள்.

போட்சிட்டி அமைப்பதற்காக நீர்கொழும்பு கடற்பகுதியில் இருந்து மணல் எடுத்துச் செல்லப்படுகின்றது. ஆனால் நீர்கொழும்பு கடற்பகுதியில் ஆழமாக்கப்பட்ட பகுதி கடல் அரிப்பால் குடியிருப்புப் பகுதி பாதிக்கப்படும். முற்றுமுழுதான மீன்பிடி பிரதேசமாகவுள்ள நீர்கொழும்பு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே அரசின் இவ்வாறான செயற்பாட்டுக்குத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் எதிராகவே செயற்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகிறது என்று தெரிவித்தனர். (த-213)

# தன்னாட்சி கேட்போர் தடுமாறவே கூடாது

## மன்னாரில் வைத்துத் தெரிவித்தார் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன்



மன்னார், ஜூலை 17

தன்னாட்சி கேட்போர் தடம் மாறி நடந்து கொள்வதை இனியாவது தவிர்க்க வேண்டும் என வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த ஈழத்தின் பிரபல எழுத்தாளர் சர்மிலா வினோதினியின் படைப்பான 'மொட்டப்பனையும் முகமாலைக் காத்தும்' என்கின்ற சிறுகதைத் தொகுப்பு நூலுக்கான அறிமுக நிகழ்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரத்தின் பின்னரான காலம் தொடக்கம் எமது உண்மையான வரலாறு வெளிவராமல் சிங்கள புத்திஜீவிகள் பார்த்துக்கொண்டனர். இதை இப்போது நினைத்தாலும் அருவருப்பாக உள்ளது. எனவே தான் எமது வரலாற்றின் சம்பவங்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஆவண மயப்படுத்தப்பட வேண்டும். கடந்த 30 ஆண்டு போர் சூழல்களிலும், இறுதிப்போரின்போதும் ஏற்பட்ட இழப்புக்கள் சிந்திக்க அல்லது மீட்டுப் பார்க்க முடியாத நிகழ்வுகளாக அமைந்தாலும்கூட அந்த நிகழ்வுகள் ஆவணப் படுத்தப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். இன்று துயரத்தை தரக்கூடிய பல உண்மைச் சம்பவங்கள் இன்னும் நூறு ஆண்டுகளில் உருமறைப்பு செய்யப்பட்டு உரிமைக்கான போரின் வடிவம் வேறு கோணத்தில் காட்டப்பட வாய்ப்புக்கள் உள்ளன. இன்று தமிழ் மக்களின் விடுதலைக்கான எழுச்சி, பயங்கரவாதம் என்ற சொல்லால் அமுக்கப்பட்டு வருவதை நாங்கள் அவதானிக்க வேண்டும். எம்மிடையே இன்றும் வாழும் எத்தனையோ இலக்கியப் படைப்பாளிகள் தமது படைப்புக்களை அச்சேற்றம் செய்வதற்கும், அவற்றை விநியோகம் செய்வதற்கும் தேவையான முதலீடுகள் அற்ற நிலையில் அமைதியாக இலை மறை காயாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட படைப்புக்களை இனம் கண்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவர்களின் படைப்புக்களை பிரசுரம் செய்வதற்கும் ஏதுவாக ஒரு புதிய வேலைத்திட்டம் வடமாகாண சபையினால் அறிமுகம் செய்யப்பட்டு அத்தகைய படைப்பாளிகளுக்கான மதிப்புறுத்தலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான படைப்பாளிகள் எமது காலத்தின்போது வடமாகாண சபையால் மதிப்புறுத்தப்பட்டனர்.

இருந்த போதும் பல கலைஞர்கள் இன்னமும் அடையாளப் படுத்தப்படாமல் இருக்கின்றார்கள். தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகள், வர்க்க ரீதியான சிந்தனைகள் போன்ற காரணங்களே அவர்களை வெளிப்படுத்தாமல் இருப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நாம் இவ்வாறான குறுகிய சிந்தனைகளுள் இருந்து வெளியே வர வேண்டும். நாம் யாவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற தாயக மொழிச் சிந்தனை மேலோங்க வேண்டும். அவ்வாறான சிந்தனை மேலோங்கினால் தான் எம்மை நாம் ஆள்வதற்கு தகமை உடையவர்கள் ஆவோம். தன்னாட்சி கேட்போர் தடம்மாறி நடந்து கொள்வதை இனியாவது தவிர்க்க வேண்டும் - என்றார். (ம-56)





## முன்னாள் எம்.பி. வசந்தனின் 21ஆவது நினைவு தினம்

வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மறைந்த வசந்தனின் 21ஆவது நினைவு தினம் நேற்று வவுனியாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவரின் திருவு ருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தியதோடு, அஞ்சலி உரையும் இடம்பெற்றது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா நகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் சிறி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகிநடைபெற்றுவரு கிறது. தொடர்ந்து 15 நாள்கள் உற்சவம் நடைபெறும். தினமும் மாலை 4 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி தொடர்ந்து பூசை இடம்பெற்று வைரவர்ப் பெருமான் உள்வீதி வலம் வருதல் இடம்பெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி 15 ஆம் திருவிழா அன்று சுவாமி பெருவீதிவலம் வருதல் இடம்பெறும் என்று நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# மக்களை முட்டாளாக்கியுள்ளனர் யாழ்ப்பாணம் மாநகர சபையினர்

## முன்னாள் மாகாண அமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17

அதிஉயர்வேகத் தொலைத் தொடர்புக் கம்பங்களைச் சாதாரண மின் விளக்குக் கம்பங்களாகக் காட்டி யாழ்ப்பாண மாநகர சபை மக்களை முட்டாள்களாக்கியுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையும் சில பிரதேச சபைகளும் 5ஜி தொடர்பாடற் கம்பங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்கியிருப்பதாகப் பொதுமக்களிடையே சந்தேகங்கள் வலுப்பெற்றுவருகின்றன. கம்பங்களை அமைப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விடயத்தில் யாழ்ப்பாண மாநகர சபையிலும் இதனை அமைப்பது தொடர்பாக எடொக்ரோ என்ற நிறுவனத்துடன் அது செய்துகொண்ட ஒப்பந்தத்திலுமே தவறு உள்ளது.

எடொக்ரோ தொலைத்தொடர்பு உட்கட்டுமானங்களை அமைத்துக் கொடுக்கின்ற மலேசியாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகின்ற ஒரு தனியார் நிறுவனம். இரண்டு தரப்புகளும் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் திறன் விளக்குக் கம்பங்களை அமைப்பதற்கான ஒப்பந்தம் என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் முதலில் விளக்குகள் பொருத்துவது பற்றியும் அடுத்து விளம்பரச் சாதனங்கள் பொருத்துவது பற்றியும் பின்னர் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்துவது பற்றியும் குறிப்பி டப்பட்டுள்ளது. கடைசியில் ஏதோ முக்கி யத்துவம் இல்லாத ஒன்றைக் குறிப்பிடுவது போல சிறிய செலூலர் அன்ரெனாக்கள் பொருத்தப்படுவது பற்றியும் குறிப்பிடப்பட்டி ருக்கிறது.

உண்மையில், இதுவே முதன்மை யானது. விளக்குகள், விளம்பரங்கள், கமெராக்கள் எல்லாம் இதனுடன் கொடுக்கப்படுகின்ற உதிரி இணைப்புகள். மக்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்களை ஏமாற்றும் நோக்கில் இவற்றை முன்னி லைப்படுத்தியிருப்பது பாரதூரமான தவறு.

ஒப்பந்தத்தில் சிறிய அலைஈர்ப்பி என்று குறிப்பிடப்பட்டுள் ளதே தவிர அது 4ஜி அல்லது 5ஜி தொடர்பாடலுக்கானதா என்பது பற்றி எதுவுமே குறிப்பிடப்பட வில்லை. ஆனால், 5ஜி அலைக்கற்றைக்கான அன்ரெனாக்கள் மிகவும் சிறியவை என்று புரிந்துகொள்ளமுடி யாத அளவுக்கு யாழ்ப்பாணச் சமூகம் அறிவிலிகள் அல்லர். டயலொக், மொபிரெல் நிறுவனங்கள் 5ஜி அலைக்கற்றைகளை அண்மையில் பரீட்சார்த்தமாகப் பரிவர்த்தனை செய்துவிட்டு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணையத்திடமிருந்து வணிக ரீதியிலான அனுமதிக்காகக் காத்திருக்கின்றன. மொபிரெல் 5ஜி வலையமைப்புக்கென 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்த ஆண்டில் செலவிடவிருப்பதாக அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் இந்தக் கம்பங்கள் 5ஜிக்கு உரியவை என்று பொதுமக்கள் கருதுவது நியாயமானதே.

தொலைத்தொடர்புத் தொழிநுட்பத்தில் 5ஜி எனப்படுவது 5 ஆவது தலைமுறை என்பதைக் குறிக்கிறது. இது தற்போதுள்ள நான்காவது தலைமுறையான 4ஜி ஐ விட அதி உயர் வேகத்தில், மிகக் குறுகிய நேரத்தில், அதிக கொள்ளளவுடைய தகவல்களைப் பரிமாற்றக்கூடியது. ஆனால், இதன் அலைக்கற்றைகள் குறுகியஅலைநீளம் கொண் டவை. இதனால், 5ஜி வலையமைப்பில் மிக அதிக எண்ணிக்கையான அலைஈர்ப்பிகளை குறுகிய இடைவெளிகளில் அமைக்க வேண்டும். இதனாலேயே மின்விளக்குக் கம்பங்களின் இடத்தை அன்ரெனாக் கம்பங்கள் பிடிக்க ஆரம்பித்துள்ளன. 5ஜி வலையமைப்பில் அன்ரெனாக்கள் அதிகம் என்பதால் நாம் என்றும் எப்போதும் மின்காந்தக் கதிர்வீச்சின் தாக்குதலுக்கு ஆளாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இது மனிதர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தானது. இதனால், இதனை முழுமையாக அனுமதிப்பதில் மேற்குலக நாடுகள் தயக்கம் காட்டிவருகின்றன. இதன் பாதிப்புகளை முழுமையாக ஆய்வுசெய்கின்றவரைக்கும் தொலைத் தொடர்பாடலில் 5ஜி ஐப் பயன்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறு 36 நாடுகளைச் சேர்ந்த 180 விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கூட்டாகக் கோரி க்கை விடுத்துள்ளனர். அமெரிக்கா 5ஜி வலையமைப்பின் ஊடாகச் சீனா உளவு பார்க்கலாம் என்ற அச்சம் காரணமாகச் சீனத் தயாரிப்பு 5ஜி அலைபேசிகளைப் பயன்படுத்துவதற்கு அங்கு தடை விதித்திருக்கிறது. தொழில்நுட்ப நாடான சிங்கப்பூர் இன்றுவரை 5ஜி ஐ ஆரம்பிக்கவில்லை. இந்த நிலையில், அடிப்படைச் சேவைகளையே மக்களுக்கு முழுமையாக வழங்கமுடியாத நிலையில் உள்ள யாழ்ப்பாண மாநகர சபையும், சில பிரதேச சபைகளும் 5ஜிக்கு அவசரம் அவசரமாகப் பச்சைக் கம்பளங்களை விரிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத, காலத்தால் முந்திய ஒரு செயல். அத்தோடு, யாழ்ப்பாண மாநகரசபை இது தொடர்பாக எடொக்ரோவுடன் செய்துகொண்ட ஒப்பந்தமும் முறையற்றது. மாநகரசபைகளுக்குரிய விதிகளின்படி ஒருவருடத்துக்கு மேலான காலத்துக்கு ஒரு திட்டத்துக்கு அனுமதி வழங்கும்போது ஆணையாளரும், மாநகர முதல்வரும் கண்டிப்பாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும். ஆனால், பத்து வருடங்களுக்கு அனுமதி வழங்கியுள்ள இந்த ஒப்பந்தத்தில் மாநகர முதல்வர் மட்டுமே கையெழுத்திட்டுள்ளார். மாநகர ஆணையாளர் என்ன காரணத்துக்காகவோ கையெழுத்து இடுவதைத் தவிர்த்துக்கொண்டார்.

இவற்றின் அடிப்படையில், திறன் விளக்குக் கம்பங்கள் என்ற போர்வையில் அதிஉயர் வேகத் தொடர்பாடற் கம்பங்களை அமைக்கும் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையும், பிரதேச சபைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (து)

## உயர்தர மாணவர்கள் ஒன்று கூடல்

கொடிகாமம், ஜூலை 17

யாழ்ப்பாணம் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர்கள் ஒன்று கூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் செல்வன் ஜெ.நிருஷன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை உதவிப் பொறியியலாளர் க.அருள்குமரன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இரத்தினேஸ்வரி தங்கராசா, போசகர் வித்தியாலய முதல்வர் க.சண்முகதாஸ், துணைப் போசகர் வித்தியாலய துணை முதல்வர் இ.முருகதாஸ், உயர்தரப்பிரிவு பகுதி தலைவரும் பொறுப்பாசிரியருமான நி.முருகதாசன், ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)



# மகா சங்கத்தை அவமதித்தோர் மன்னிப்புக் கோருவது அவசியம்

## வலியுறுத்துகின்றார் மகிந்த

கொழும்பு, ஜூலை 17

மகா சங்கத்தினரை அவமதித்தவர்கள் மன்னிப்புக் கோர வேண்டும் என்று தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ச. காலியில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



மகா சங்கத்தினரை அவமதித்தவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யாவிட்டால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சமூக வலைத்தளத்தில் பௌத்த தேரர்கள் தொடர்பாகச் சர்ச்சைக்குரிய கருத்தொன்றைப் பதிவிட்டுள்ளார் என்று கூறப்படுகின் றது. தற்போது நாட்டில் கூக்குரல் இட்டுத் திரியும் 90க்கும் அதிகமான பிக்குகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்பட்டவர்கள் எனவும் அதனால் மன அழுத்தங்களுக்கு உட்பட்டதாலேயே இவ்வாறு தேரர்கள் குரோதத்துடன் காணப்படுகின்றனர் என்றே சமூக வலைத்தளத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பதிவிட்டார் என்று கூறப்படுகின்றது.

அதையடுத்து இராஜாங்க அமைச்சருக்கு எதிராகப் பலரும் போர்க்கொடி தூக்கியுள்ள னர். இந்தநிலையிலேயே எதிர்க்கட்சித்தலை வர் மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவிதத்துள்ளார்.

அதேவேளை, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அவருக்கு எதிராக உண்ணா ஒறுப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று சிங்களே அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

ரஞ்சன் ராமநாயக்கவின் இந்த செயற்பாடு தொடர்பான உரிய விளக்கத்தை வழங்க வேண்டும்என் ஐக்கிய தேசிய கட்சியின் தலை வரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்ரமசிங்கவும் இராஜாங்க அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (எ)

# சிறுபான்மைக் கட்சிகளின் பலத்தை காட்டியுள்ளோம்

## அப்துல்லா மஃறூப் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கட்சி பேதம் இன்றித் தோற்கடித்து மீண்டும் சிறுபான்மைக் கட்சிகளின் பலத்தைக் காட்டியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மஃறூப்.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை மக்கேய்சர் மைதானத்தில் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருட கால போர்ச் சூழ்நிலையில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்த மக்கள் இப்போது நிம்மதியாக வாழும்நிலையில் இருண்ட யுகம் ஒன்றை உருவாக்க எதிர்க்கட்சியினர் முயல்கின்றனர். அரசை முறியடிக்கவோ எம்மை வீழ்த்தவோ முடியாது.

பொருளாதார ரீதியான முன்னேற்றம் உள்ளிட்ட சகல விடயங்களிலும் தலைமை அமைச்சர் உட்பட அரசுக்கு என்றும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம். தொடர்ந்தும் எமது ஒத்துழைப்பை வழங்குவோம்.

மிக விரைவில் 22 ஆயிரம் பட்டதாரிகளுக்கான அரச துறையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. மகிந்த, சந்திரிக்கா அம்மையார் ஆட்சிக் காலத்தில் பட்டதாரிகள் ஏழு வருடங்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால் இந்த அரசில் அப்படியான நிலை இல்லை. பத்து இலட்சம் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தில் தொடர்ச்சியான நியமனங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன என்றார். (எ)

# தமிழ்ப் பற்றாளன் மாறன் காலமானார்

தமிழ்த் தேசியப் பற்றாளன் 'மாறன்' என்றழைக்கப்படும் திருநாவுக்கரசு சிவமாறன் காலமானார். புங்குடுதீவு மண்ணில் பிறந்து கிளிநொச்சி மண்ணில் அத்திவாரம் இட்டு தமிழ்த் தேசிய உணர்வோடும் தமிழ்த் தேசப் பற்றோடும் செயற்பட்டவர் சிவமாறன். தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் கடற்கலங்களின் கட்டளைத் தளபதியாக இருந்து வீரமரணம் அடைந்த லெப்டினன் கேணல் இராணிமைந்தனின் சகோதரன் இவர். சிறப்புத் தேவையுடையவராக இருந்தபோதிலும் தன்னினம் அடக்குமுறையிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் விடுபட வேண்டும் என்பதற்காக சமூகப் போராளியாக, ஜனநாயகப் போராளியாக கிளிநொச்சி மண்ணில் தனது இறுதிக் கணம் வரை வாழ்ந்த ஒரு விடுதலை வேட்கை கொண்ட மனிதர் என்று கிளிநொச்சியிலுள்ள கூட்டமைப்பின் அலுவலகமான அறிவகம் தெரிவித்துள்ளது.



இவருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி கிளை தமிழ்த் தேசியப் பற்றாளர் என்கின்ற மதிப்பை வழங்கியுள்ளது.

இவர் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொழிற்சங்கங்களின் இணைப்பாளராகச் செயற்பட்டதுடன் தீவகக் கோட்டத்தின் மாவீரர் செயற்குழுவை நிறுவி அதனூ டாக மாவீரர் நாள் நிகழ்வுகளை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிறப்பாக நடத்தியவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தன்னை மக்கள் மயப்படுத்தப்பட வேண்டிய அரசியல் செயற்பாடுகளில் சிறப்பாக செயற்பட்டு அதன் பின் யுத்தம் நிறைவுற்றதன் பின்னர் நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் எல்லாம் தமிழ்த்தேசிய உணர்வோடு ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்காக பிரச்சாரப் பணிகளை உயிரச்சுறுத்த லுக்கு மத்தியில் மேற்கொண்டவர் என்று அறிவகம் தெரிவித்துள்ளது. (த)

# போதையால் ஏற்படும் தாக்கம்; வவுனியாவில் விழிப்புணர்வு

வவுனியா, ஜூலை 17

போதைப் பொருள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு வவுனியா பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பெண்கள் அபிவிருத்தி அலுவலர் திருமதி சுபாஜினி சிவதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பளை மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.சிவரூபன் வளவாளராக கலந்துகொண்டு போதைக்கு எதிரான கருத்தரங்கை நடத்தியிருந்தார்.

'தனிமனித மாற்றமே குடும்ப மாற்றம் குடும்ப மாற்றமே சமுதாய மாற்றம்' எனும்தலைப்பில்நடைபெற்றநிகழ்வை வவுனியா உப பிரதேச செயலர் திருமதி சஜீவன் பிரியதர்சினி ஆரம்பித்து வைத்தார். போதையால் நடைபெறும் துர்நடத்தைகள், குடும்ப வன்முறைகள், போதைக்கு அடிமையானவர்களை எவ்வாறு மீட்டெடுப்பது மற்றும் போதைக்கு எதிராக பொலிஸார் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. வவுனியா பொது மக்கள் பொலிஸ் பிரிவு அதிகாரி ஐ.பி.அரவிந்த தலைமையிலான பொலிஸார் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (த)

# மாகாணத் தேர்தலை முதலில் நடத்த பெரமுன ஒத்துழைக்கும்

## செஹான் சேமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

அரச தலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (பெரமுன) ஒத்துழைப்பு வழங்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

கோத்தபாய ராஜபக்ச நாடு திரும்பியதும் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் யார் என்று தற்போது அரசியல் களத்தில் காணப்படும் சர்ச்சைக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 11 ம் திகதி தீர்வு கிடைக்கும்.

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகக் களமிறக்க கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளி கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளது - என்றார். (எ)

# குவைத் சென்ற பணிப்பெண் எஜமானரால் சித்திரவதை

கொழும்பு, ஜூலை 17

பணிப் பெண் வேலைக்காகக் குவைத் சென்ற பெண் ஒருவர், எஜமானரால் துன்புறுத்தப்பட்ட நிலையில் வெறுங்கையுடன் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

உடல் நலம் குன்றிய நிலையில் நாடு திரும்பிய அவர் தற்போது நீர்கொழு ம்பு மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எஹ்லியகொடவைச் சேர்ந்த, 4 பிள்ளைகளின் தந்தையான மா.சுலோச்சனா என்ற பெண்ணே இவ்வாறு துன்புறுத்தப்பட்டுள்ளார்.

குவைத்தில் பணியாற்றிய வீட்டின் எஜமானர் இரு தினங்களுக்கு ஒரு தடவை பணிஸ் போன்ற ஒரு உணவை மட்டுமே தருவார் என்றும், உணவு மற்றும் ஊதியத்தைக் கேட்டால் அடித்துச் சித்திரவதை செய்வார் என்றும் சுலோச்சனா அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஒரு தடவை வீட்டில் இருந்து தப்பியோடி குவை த்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்தபோதும், அங்கு வந்த எஜமானர் நல்லவிதமாகப் பேசித் திருப்பி அழைத்துச் சென்றார் என்றும், அதன்பின்னர் அறை ஒன்றில் பூட்டிச் சித்திரவதை செய்தார் என்றும், ஊதியத்தைக் கேட்டால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது என்றும் சுலோச்சனா தெரிவித்துள்ளார். (எ)

# ஓமந்தையில் 7 மிதிவெடிகள் மீட்கப்பட்டன

வவுனியா ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்துக்கும் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல் அரணுக்கும் இடைப்பட்ட விளக்கு வைத்த குளம் பகுதியிலிருந்து நேற்றுக் காலை 7 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் நேற்றுக் கனரக இயந்திரத்தின் உதவியுடன் துப்புரவுப் பணிகள் நடைபெற்றன. அதன்போதே மிதிவெடிகளை காணிக்காரர் கண்டறிந்து பொலிஸாருக்கு அறிவித்தார். நீதிமன்ற அனுமதியுடன் அவை அழிக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

# மல்லிகை திரவ உற்பத்தி தொழிற்சாலைக்கு அடிக்கல்

வவுனியா, ஜூலை 17

வவுனியா, புளியங்குளம், பழையவாடி தம்பா மல்லிகைப் பண்ணையில் மல்லிகை நறுமணத் திரவ உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது. அதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.



இந்திய துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் வவுனியா, புளியங்குளம் தம்பா மாதிரிப் பண்ணையில் மதுரை மல்லிகைச் செய்கை இடம்பெற்று ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக சனசமூக நிலையங்கள் மூலம் கிராம மட்டத்தில் 100 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மல்லிகைக் கன்றுகள் செய்கை பண்ணுவதற்காக வழங்கப்படுகிறது. குறித்த மல்லிகைச் செடிகளில் இருந்து குறித்த பண்ணையிலிருப்போர் பூக்களைக் கொள்வனவு செய்வர்.

அந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரக கொன்சியூலர் எஸ்.பாலச்சந்திரன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:

இலங்கையும், இந்தியாவும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது எங்களது அவா. மலையக மக்களுக்கு வீட்டுத்திட்டங்களை இந்தியா வழங்குவது போன்று இந்திய வம்சாவழி மக்களுக்கு இந்தியா பல புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. பல்வேறு துறை சார்ந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. எந்த நேரமும் எமது தூதரகத்துடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற முடியும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜா, உட்பட கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மல்லிகை செய்கையாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த)

மஞ்சள் அங்கிகளின் எதிரொலி

# தேசிய தின நிகழ்வில் வன்முறை போர்க்களமாகியது பாரிஸ் நகரம்

பாரிஸ், ஜூலை 17

பிரான்சில் தேசிய தினக் கொண்டாட்டத்தின்போது நடந்த போராட்டத்தில்வன்முறைவெடித்தது. இதனால்பாரிஸ்நகரம்போர்க்களமாக மாறியது.



கடந்த ஞாயிறன்று பிரான்சின் தேசிய தினமான பாஸ்டில் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டித்தலைநகர்பாரிசில் உள்ள சாம்ப்ஸ் எலிசீஸ் பகுதியில் பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு நடந்தது. பிரான்சின் தலைமை அமைச்சர் மக்ரொன் மற்றும் ஐரோப்பியத் தலைவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர். இந்தநிகழ்ச்சி நடந்து முடிந்த பிறகு நூற்றுக்கணக்கான மஞ்சள் அங்கிப் போராட்டக்காரர்கள், சாம்ப்ஸ் எலிசீஸ்பகுதிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்குபாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார்போராட்டக்காரர்களை அகற்ற முயன்றனர். இதனால்இரண்டுதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. வன்முறை வெடித்தது. தேசிய தினக் கொண்டாட்டத்தின் போது பாரீஸ் நகரம் போர்க்களமாகக் காட்சி அளிக்கின்ற பெரும் துயரம்நடந்தது.

**பின்னணி**

பிரான்சில் பெட்றோல் மற்றும் டீசல் மீதான வரி உயர்வை எதிர்த்து கடந்த வருடம்நவம்பர் மாதம் மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.
அவர்கள்மஞ்சள்அங்கியை அணிந்துகொண்டு போராடுவதால் இது மஞ்சள் அங்கிப்போராட்டம்எனஅழைக்கப்பட்டது. இந்தப் போராட்டம் பிரான்சை ஸ்தம்பிக்க வைத்தது.
மக்களின் போராட்டத்துக்கு அடிபணிந்தபிரான்ஸ்அரசு எரிபொருள் மீதான வரி உயர்வைநீக்கியது. ஆனாலும் அரசின் பல்வேறு கொள்கைகளுக்கு எதிராக அங்கு மஞ்சள் அங்கிப் போராட்டம்தொடர்கிறது.

## ஈரான்– அமெரிக்காவுடன்பேச்சு முன்வருகிறார்பிரான்ஸ் அதிபர்



பாரிஸ், ஜூலை 17

ஈரான் -அமெரிக்கா இடையேதற்போதுஏற்பட்டுள்ளமுறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஈரான், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அதிபர்களுடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகப் பிரான்ஸ் அதிபர் எமானுவல் மக்ரோன்தெரிவித்தார். பன்னாட்டுஊடகம்ஒன்றுக்குவழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதைக் குறிப்பிட்டார். மிகவும் மோசமான சூழ்நிலையிலேயே இந்தப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் கூறினார். ஈரானுடன் ஏற்படக் கூடிய போர் முழு உலகையும் பாதிக்கும் எனக் கூறியே மக்ரொன் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டார்.

**பின்னணி**

பன்னாட்டு அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் ஒன்றில் ஈரான், அமெரிக்கா ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற பல நாடுகள் கைச்சாத்திட்டன. பின்னர் சென்ற ஆண்டில் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியது.
ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்த ஒப்பந்தத்தின் ஊடாக ஈரான் தனது யுரேனியச் செறிவை அதிகரிக்க முடியாது. இந்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வந்த ஈரான், தங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை அமெரிக்கா விலகிக் கொள்ளும்படி அந்த நாட்டின் மீதுஇந்தஒப்பந்தத்துடன்தொடர்புடையஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியது. இல்லாவிடில், தனது யுரேனியச் செறிவூட்டலை அதிகரிக்கப் போவதாக எச்சரித்தது. அதன்படியே சமீபத்தில் யுரேனியச் செறிவூட்டலையும் அதிகரித்தது. அதேவேளை ஈரானின்பின்புலத்துடன்செயற்படும்ஹவுத்திஆயுததாரிகள், சவூதியின் வானூர்தி நிலையங்கள்,எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் என அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. அத்தோடு தனது போர்க்கப்பல் ஒன்றை வளைகுடாவில் நிறுத்தியுள்ளது.
அமெரிக்காவின் ஆளில்லா வானூர்தி ஒன்றை ஈரான் சுட்டு வீழ்த்தியது. ஈரான் மீது தாக்குதல் நடத்துமாறு அமெரிக்க ... ளைவிடுத்தார். பின்னர் அந்தத் தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டார்.



## இந்தியாவுக்கு வான்வழி திறந்தது பாகிஸ்தான்

இஸ்லாமபாத், ஜூலை 17


இந்தியாவின் வானூர்திகள் பாகிஸ்தானின் வான் வழியூடாகப்பறக்கும்வகையில்பாகிஸ்தான்தனதுவான்வழியைத் திறந்தது. கர்தார் - பூர்குருத்வாரா ஆகிய இடங்களுக்கு இடையேவான்வழியைத்திறந்து விடுவது தொடர்பாகஇரண்டுநாடுகளுக்கும்இடையேநடந்தபேச்சுக்களில் உடன்பாடு ஏற்பட்டிருந்த சூழலிலேயே தனது வான்வழியை இந்திய வானூர்திகளின் பயன்பாட்டுக்குப் பாகிஸ்தான் திறந்துள்ளது.
காஷ்மீரின்புல்வாமாமாவட்டத்தில்கடந்தபெப்ரவரிமாதம் ஆயுததாரிகள்இந்தியச்சிப்பாய்களைக்குறிவைத்துத்தாக்குதல் நடத்தியதில் இந்தியா, பாகிஸ்தானுக்கு இடையே ஏற்பட்ட பதற்றம் காரணமாகத் தனது வான்வழியை இந்திய வானூர்திகள் பயன்படுத்த பாகிஸ்தான் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தில்சாவுகள் அதிகரிப்பு!

காத்மண்டு, ஜூலை 17




நேபாளத்தில் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் 67 பேர் சாவடைந்தனர் எனப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.
அத்தோடு ஆயிரக்கணக்கானமக்கள்பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். தொடர்ந்து 5 நாள்களாகப் பெய்து வரும் பருவமழை அந்தப் பகுதியை முற்றிலுமாக வெள்ளமயமாக்கியுள்ளது..அந்த நாட்டு இராணுவத்தினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை30பேர்காணாமல்போனதாகவும்பல மக்கள்காயமடைந்தாகவும்தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் சாவுகள் இன்னமும் அதிகரிக்கக்கூடும் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**இடபம்:** அடுத்தவர் விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை சரிசெய்வது நல்லது. எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். நண்பரின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கையளிக்கும்.

**மிதுனம்:** திட்டமிட்ட செயல்நிறைவேறி நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும். எதிரி தொல்லையை சமயோசிதமாக சரிசெய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாக இருக்கும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்காலம் குறித்து திட்டமிடுவீர்கள். சுபவிஷயத்தில் முயற்சிக்கான பலன் கிடைக்கும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர்கொள்வீர்கள்.

**கன்னி:** வாக்குறுதிக்கு மாறாக சிலர் செயல்படலாம். .தொழில்வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திப்பர். பெண்கள் உடல்நலனில் அக்கறை கொள்வர்.

**துலாம்:** கடந்த கால உழைப்புக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபாரம் செழிக்க அதிக நேரம் பணிபுரிவீர்கள். ஆதாயம் பன்மடங்கு உயரும். அக்கம் பக்கத்தினர் மத்தியில் செல்வாக்கு உயரும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் ஆலோசனையை ஏற்று நடப்பீர்கள். திட்டமிட்ட பணிகள் கூடுதல் காலஅவகாசத்தில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி குறுக்கிடும்.

**தனுசு:** தன்னம்பிக்கையுடன்செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். உபரி வருமானம் சேமிக்க உதவும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**மகரம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். முக்கியச் செலவுக்காக சேமிப்பு பணம் கரையும்.

**கும்பம்:** குடும்பத் தேவைகள் குறையின்றி நிறைவறும். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர். ... பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். சமூகத்தில் புதிய அந்தஸ்து கிடைக்கும்.

உதயன்
@UthayanPrint
ஜூலை 17, 2019
புதன் பொய்கை

கே.எஸ்.சிவஞானராஜா

# நல்லூரிலே கலை ஊற்றெடுத்தது நாவற்குழியிலே அது தேனாகியது!

ஒரே நாளில் அதிசயமான இரண்டு நிகழ்வுகள் வடக்கு மாகாணத்துக்கு வரம் சேர்த்தன. ஒன்று- பிரதேசப் பண்பாட்டுப் பெருவிழா. மற்றையது திருவாசகப் பெருவிழா. நல்லூரில் பண்பாட்டுப் பெருவிழாவும் நாவற்குழியில் திருவாசகப் பெருவிழாவும் நனிசொட்டும்படி கச்சிதமாக அரங்கேறியது.




**நல்லூர்**

த்மிழ், சமயம், கலைகள், கலாசாரம், பண்பாடு, இசைவிழா, அரங்கேற்றம், வழிபாடு, சித்தர் மகிமைகள், அற்புதங்கள், அதிசயங்கள், மாநாடுகள், கம்பன்விழா, மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, சங்கிலியன் சிலை, யமுனா ஏரி, திணைக்களங்கள், பிரதேச செயலகம், மாநகர சபை, புராதன ஆலயங்கள், ஆதீனங்கள், பாடசாலைகள் என நல்லூர் ஒரு கலாசார நகரமாகவும் உலகத்தவர்கள் சங்கமமாகும் ஒரு சொக்காபுரியாகவும் வெகுசீக்கிரமமாக மாறிவருகிறது. புராதன நகரமாகவும் பதிவாகிறது.

இந்த நிலையில் நல்லூர் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் மற்றும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இம்முறை 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தலைமையில் மண்டபம் நிறைந்த அரங்காக நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மேற்படி பண்பாட்டு விழா நல்லூரில் ஊற்றெடுத்துப்பிரவாகித்தது.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் இ.இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களக் கல்வி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருவாட்டி அபிராமி பாலமுரளியும் மதிப்புறு விருந்தினராக பிரபல்யமான மூத்த நாதஸ்வர வித்துவான் கலாபூசணம் வல்லிபுரம் குமாரசாமியும் கலந்து கொண்டு பண்பாட்டுக்கும் பாரம்பரியத்துக்கும் பரோபகாரஎம் கலைகளுக்கும் உயிரூட்டினர்.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அரங்கிலே நடைபெற்ற இந்த விழா மங்கல இசையால் நனைந்து பார்வையாளர்களைக் குளிரவும் மகிழவும் நிமிரவும் வைத்தது. தவில் மேசை பிச்சையப்பா இரவீந்திரன் குழுவினருடைய தனித்துவமான பாணியும் பக்குவமும் மனோதர்மப் பாங்கும் நல்லூருக்குக் கலைப் பாரம்பரியத்தைச் செறிவூட்டின. உயிரூட்டிற்று.

தமிழ்மொழி வாழ்த்தும் கலாசாரப் பேரவைக் கீதமும் பாடி இசைத்த மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே. அவர்களது உடை நடை பாவனை உச்சரிப்பு ஒழுங்கமைப்பு, இசையமைப்பு, சமர்ப்பணம் யாவும் பிரம்மாதம். பழக்கியவர்களுக்கு ஒரு சபாஷ்.

அரங்கத் திறப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும் சிறந்த ஆன்மிக பட்டிமன்ற பேச்சாளருமாகிய திருவாளர் குமரேசன் பாலசண்முகன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் குருபக்தியையும் அவரது



ஆன்மிக ஆளுமை பற்றியும் அவரின் பதவிநிலைச் சிறப்புக்கள் பற்றியும் திருமந்திரம் ஊடாக வாழ்ந்த கடமை, கண்ணியம் கட்டுப்பாடு பற்றியும் தெட்டத் தெளிவாக உரையாற்றினார். அளவான அழகான அருமையான பேச்சு. நல்லூர் பிரதேசத்துக்குக் கிடைத்த சொத்து அவர்.

**நடனங்கள் அற்புதம்**

நல்லூர் தெற்கு நல்லைக் கலாமந்திர் நடனமன்றம் வழங்கிய வரவேற்பு நடனமும் நல்லூர் ஹிமாலயா நடனப் பயிலகம் வழங்கிய நடனங்களும் சபையோரைக் கொஞ்ச நேரம் கட்டிப்போட்டு இரசிக்க வைத்தன. படிமுறையான பயிற்சிகளின் வாயிலாக நடன ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு மாணவர்களை அரங்கிலே அரங்கேற்றியிருந்தமை பாராட்டுதற்குரியது. அற்புதமான ஆற்றுகையாகும்.

தொடர்ந்து 'கலைஞானச்சுடர்' மலர் வெளியீடும் கலைஞர் மதிப்புறுத்தலும் அரங்கிலே முதன்மை இடத்தைத் தனதாக்கிக் கொண்டன. வடக்கு மாகாணத்திலும் இலங்கையிலும் மிகவும் பிரபல்யமான கலைஞர்களை இனங்கண்டு நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குள் வதியும் மூத்த கலைஞர்களுக்கு பட்டங்களும் விருதுகளும் பொன்னாடைகளும் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப் பட்டனர். அதேபோல இளங்கலைஞர்களும் மதிப்புறுத்தப்பட்டமை வரவேற்புக்குரியதாகும். வாய்ப்பாட்டுக் கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள், தவில் நாதஸ்வரக் கலைஞர்கள், சித்திர நடனநாட்டிய ஓவிய, சிற்ப, பண்டித, புலவ, பஞ்சகர்மாக்கள் என்ற வகையில் கலைஞர்கள் இனங்காணப்படுகின்றனர்.

கலாசார அபிவிருத்தி அலுவலர் வி.விஜயரட்சகனும் கலாசார அலுவலர் திருமதி விஜிதா செல்வகுமாரும் உரிய பொறுப்புக்களை செவ்வனவே நிறைவேற்றி நிறைவு கொண்டனர்.. அவர்தம் பணி வெல்வதாக. உரையாற்றிய தலைவர், முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர், அரங்கத் திறப்புரைஞர், வரவேற்புரைஞர் அனைவரும் இரத்தினச் சுருக்கமாகத் தத்தம் கருத்துக்களை வெளியிட்டமை பெரும் புண்ணியமாக அமைந்தது.







ஒலியமைப்பும், மேடையமைப்பும் இதனை மேலும் பேறாக்கியிருக்கலாம். நல்லூரிலே ஆன்மிக பீடமாகிய ஆதீனத்தில் ஊற்றெடுத்த நல்லூர் பிரதேச செயலக பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நல்லூரை நனைத்தது மட்டுமல்ல பார்வையாளர்களையும் மனங்குளிரச் செய்தது. இந்த அதிசயம் நடைபெற்றவேளை இன்னுமொரு ஆச்சரியமான பேரின்பப்பேறு நாவற்குழியில் கிட்டியது. அதுதான் திருவாசக விழாவில் தேன் பாய்ந்தது. ஆம்! நாவற்குழியில் தேனாறு.
நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மூத்த ஓதுவார் மூர்த்தி, திருமுறைக் கலாநிதி திருத்தணி என். சுவாமிநாதன் அவர்களது 'திருவாசகம் சிறப்பு அரங்கு' தேனாகப் பாய்ந்து ஆறாக ஓடி யது. திருவாசகம் என்னும் தேனைப் பருகி மாந்தியவர்களை அதன் மயக்கத்திலிருந்து மீட்பதாக பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்களின் 'பரதநாட்டிய அரங்கு' சிறப்பு இடம்பிடித்தது. அது ஒரு பிரமாண்டமான தயாரிப்பு! ஆர்த்த பிறவித்துயர்கெட வாய்த்த கூத்தன் எமக்குத் தீர்த்தன்.

**தேனாறு**
ஓதுவார் மூர்த்தி திருத்தணி சுவாமிநாதன், திருஞான சம்பந்தரின் வரங்களோடு கூடியிருந்த பக்த அடியார்களையும் அழைத்துக் கொண்டு கோணமாமலையில் அமைந்து அருள் சுரக்கும் எம்பெருமானிடம் சரண் புகுந்த நிலையில் "தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றியிசைப்பார்கள் வாயினும் மனத்தும் மருவி நின்றகலா மாண்பினர் காண் பலவேடர் நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி

**நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மூத்த ஓதுவார் மூர்த்தி, திருமுறைக் கலாநிதி திருத்தணி என். சுவாமிநாதன் அவர்களது 'திருவாசகம் சிறப்பு அரங்கு' தேனாகப் பாய்ந்து ஆறாக ஓடி யது.**

நுழைதரு நூலினர் ஞாலம் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே! என்று பண்புறநீர்மையில் பாடி சபையோரை வசீகரித்தார்.
தொடர்ந்து முத்துவிதான பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானை வையகம் முந்தும் எனும் பாசுரங்களைத் தொடர்ந்து திருவாசகம் தேனாய் நாவற்குழியில் நிரம்பியது.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
வணங்கத் தலை வைத்து
சிந்தனை நின் தனக்கு ஆக்கி
கையார் வளை சிலம்ப
கீதம் இனி குயிலே
அம்மையே அப்பா
பிணக்கு இலாத
பைங்குவளைக் கார் மலரால்
முத்திநெறி அறியாத
ஆகிய திருவாசகப் பாடல்களை ஓதுவா மூர்த்தி யின் குரலில் கேட்கும்போது பாடலும் பண்ணும் பக்தியும் ஓசையும் ஒலியும் சுருதியும் லயமும் மிருதங்கமும் வயலினும் முகர்சிங்கும் 'பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் நாலும் கலந்த அமுதமுமாய்' தித்திக்கத் தித்திக்கத் தேனாகித் திவ்ய ஆறாகி நாவற்குழியைப் பேறாக்கி பெருந்தவ நிலமாக்கியது. நல்லூரையும் நாவற்குழியையும் மறக்காமல் நாம் அனுபவிக்க வேண்டும். ஆறு திருமுருகன் சிவபூமிக்கு வரமாகிறார். வாழும் கலையே ஆளுமை நமையே!

# ஆடிப்பிறப்பும் அதன் ஆனந்தமும் தமிழர் பாரம்பரியமும் பண்பாடும்



பழனித்துரை தர்மகுமாரன்

ஆடி பிறந்துவிட்டால் தமிழர் வாழ்வில் மட்டற்ற மகிழ்ச்சியும் புத்துயிர்பெற்ற மானுட எதிர்காலமும் தித்திக்கும் என்பது வரலாற்று உண்மை. தமிழர் தம் வரலாற்றில் ஆடிப்பிறப்பு என்பது கலாசார பண்பாடோடு மட்டுமன்றி உயிரோட்டத்துடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.
தமிழர்கள் தம் வாழ்வில் குதூகலித்துக் கொண்டாடும் விழாக்கள் பல. அவற்றில் ஒன்றுதான் ஆடிப்பிறப்பு. ஆடி பிறந்தால் கோடி நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பொதுவாக ஆடிப்பிறப்பை வரவேற்கும் பண்பாடு சம்பிரதாயம் தமிழர்களிடத்தே நிலைத்துவிட்டது.

**ஏன் தோன்றியது**
ஆடி மாதத்தில் கற்கடக ராசியில் சஞ்சரிக்க தொடங்கும் சூரியன் வடக்கு தெற்காக சஞ்சரிக்கும் காலம் இதுவாகும். இந்த வகையில்தான் அடி மாதம் முக்கியம் பெறுகின்றது. இந்தக் காலப்பகுதியில் மழை, குளிர், உக்கிரமடைந்து காணப்படும் வெள்ளப்பெருக்கு ஏற்படும்.
இதன் மூலம் மக்களுக்கு நோய்நொடிகள், தொற்று நோய்கள், சூழல் மாசடைந்து சுவாச நோய்கள் ஏற்படுவது இயல்பானதொன்றாகும். எனவே இக்கால கட்டத்தில் மக்கள் தங்களை பொல்லாத நோயில் இருந்து பாதுகாக்க மருத்துவ குணங்களைக் கொண்ட பானமொன்றை தயாரித்து உண்டனர். அதுவே ஆடிக்கூழாகப் பயன்படுத்தப்படுகின்றது. மூலிகைச்சாறுகள் பனம் பண்டங்கள், செடி கொடிகளின் வேர்கள் போன்றவற்றை நீரூற்றி அடுப்பில் இட்டு காய்ச்சிப் பருகும் சம்பிரதாயம் ஆடிப்பிறப்போடு சங்கமமானதில் வியப்பில்லை.
ஆனால் இன்றைய காலப்பகுதியில் கொழுத்தும் வெயிலும் எரிக்கும் வெப்பமும் ஆடி மாதத்தை அடியோடு மாற்றிவிட்டது. இருந்தபோதும் ஆடிமாதத்தில் இவ்வாறான வெப்ப நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க மக்கள் மாரித் தெய்வத்தை வழிபடும் பண்பு பழமையானதும் புராதனமானதுமாகும். எனவே தேவர்களின் அந்திய வேளையாக வரும் ஆடிமாதத்தில் வழிபாடுகள் பரவலாக நடத்தப்படுகின்றன. அம்பிகை வழிபாடுகள் இந்தக் காலப் பகுதியில் அதிகமாக நடைபெறும் ஆடிப்பூர பண்டிகையும் இம்மாதத்திலேயே இடம்பெறுகின்றது. இதனால் ஆடிப் பிறப்பு, ஆடிப்பூரம் என்பன ஆடி மாதத்தை தமிழ் மக்கள் மனதில் ஆழப்பதித்துள்ளது.
இந்த ஆடிப்பிறப்பில் உருவாக்கப்பட்ட உணவுப் பழக்கமானது சிறந்த மருத்துவகுணம் கொண்டதாகவும் போசாக்கு நிறைந்த உணவாகவும் காணப்படுகின்றது. இது இலங்கை தமிழரின் பாரம்பரிய பண்பாட்டு உணவாகும்.
ஆடிக் கொழுக்கட்டை, கூழ் என்பன போசனை நிறைந்த இயற்கை உணவாகவும் தூய்மையானதாகும். இதனை எல்லோரும் விரும்பி மகிழ்வுடன் உண்பார்கள். இதில் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின், கனியுப்பு, நார்ப்பொருள் நிறைந்ததாகக் காணப்படுவதனால் ஆரோக்கியமுள்ள சமூக அமைப்பு காணப்பட்டது.



**பாட்டன், முப்பாட்டன் காலத்தில் இருந்து கடைப்பிடித்த தமிழர் சமூகம் ஒற்றுமையாகவும் பலமாகவும் ஒன்றுகூடியும் காணப்பட்டது. இன்று இந்த நிலை படிப்படியாக குறைந்து வருகின்றது. இதனால் சமூக மயமாதல் மாயை தோற்றமாக காணப்படுகின்றது.**

**உழவருக்கு உவப்பான நாள்**
"ஆடி விதை தேடி விதை" என்பர். ஆடி மாதத்தில் முன்னெடுக்கும் தொழில்கள் பெரிய இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது. ஆடிப்பிறப்பன்று பிதிர்கள் தாம் வாழ்ந்து கழித்த இடங்களுக்கு வருவதாக நிலவும் ஐதீகம் காரணமாக கொழுக்கட்டை, கூழ், பனங்கிழங்கு முதலியவற்றை ஆடிப்பிறப்பன்று பிதிர்களுக்குப் படைத்து அவர்களை பிரீதி செய்யும் வழக்கம் இன்றும் நம்மிடையே நிலவுகின்றது.
இவ்வாறான சம்பிரதாயங்களை பாட்டன், முப்பாட்டன் காலத்தில் இருந்து கடைப்பிடித்த தமிழர் சமூகம் ஒற்றுமையாகவும் பலமாகவும் ஒன்றுகூடியும் காணப்பட்டது. இன்று இந்த நிலை படிப்படியாக குறைந்து வருகின்றது. இதனால் சமூக மயமாதல் மாயை தோற்றமாக காணப்படுகின்றது.
கிராமப்புற மக்கள் ஆடிப்பிறப்பை தெய்வபக்தியுடனும் பண்பாட்டுடனும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். ஏனெனில் அந்த குடும்பங்களில் முதியவர்கள் வீடுகளிலே இருப்பதனால் பழமை கலையாது புதுமை புகாது பாதுகாத்து வருகிறார்கள். இதனால் அதனை பின்பற்றுபவர்கள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்றனர். சொல்லுகின்றனர்.

*கட்டுரையாளர்*
*ஆசிரியர்*
*உடுவில் மகளிர் கல்லூரி*






# இத்தாலியில் இடம்பெற்ற இரு நூல்களின் வெளியீடு




'புலத்தின் கனவு' மற்றும் 'குளிர் விடும் மூச்சு' ஆகிய இரண்டு கவிதை நூல்கள் இத்தாலியில் வெளியிடப்பட்டுள்ளன. இத்தாலி வாழ் படைப்பாளி அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் இந்த நூல்களை எழுதியுள்ளார்.

இத்தாலியின் கோல்டன் திரையரங்கில் இத்தாலி தமிழர் ஆன்மிகப் பணியக இயக்குநர் அருட்பணி பீற்றர் இராசநாயகம் (அமதி) தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. மேற்படி இரண்டு கவிதை நூல்களும் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஈழத்தில் வெளியிட ஏற்பாடாகி இருந்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதராண சூழ்நிலை காரணமாக அது தவிர்க்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த இரண்டு நூல்களும் இத்தாலி மண்ணில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றுள்ளது.

முன்னதாக பங்கேற்பாளர்களுக்கான வரவேற்பு இடம்பெற்றது. தொடர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. ஆரம்ப நிகழ்ச்சிகளை றொகானி நிரோஜன் தொகுத்தளித்தார். தமிழ்த்தாய் வாழ்த்தினை திலீபன் பாடசாலை மாணவர்கள் இசைத்தனர். தொடர்ந்து நாரந்தனை கீதம் இசைக்கப்பட்டது. வரவேற்பு நடனத்தினை நுண்கலைமாணி கஸ்தூரி ரமேஸ் நெறியாள்கையில் நிருத்தியாலயா நடனப்பள்ளி மாணவிகள் வழங்கினர்.

தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. நூல்களின் அறிமுக உரையினை எழுத்தாளர் பொன்னரியம் நிகழ்த்தினார். நூலினை இரு நூல்களின் ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் நூல்களை வெளியீட்டு வைக்க, முதற் பிரதிகளை இத்தாலி ஆன்மிகப் பணியக இயக்குநர் அருட்பணி பீற்றர் இராசநாயகம் (அமதி) பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்டோர் நூல்களை பெற்றுக்கொண்டனர். (ம-159)




# சிறப்புற இடம்பெற்ற 'அணிகலன்' நூல்வெளியீடு

கொடிகாமம், ஜூலை 15

ஊடகவியலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் எழுதிய 'அணிகலன்' நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வொக்ஸ் றிசோற்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிதிய பணிப்பாளருமான ப.புஷ்பரட்ணம் தலைமையில் விழா நடைபெற்றது.

தலைமை விருந்தினராக விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன் இந்திய துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (ம-159)






காரைநகர் கலாசார மத்திய நிலையத்தில் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் ஒன்றுகூடல் இடம்பெற்றது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வின் சில ஒளிப்படங்கள்.

# எழுதப்படாத நாடக வரலாறு – 10

## 'களத்தில் காத்தான்' சிந்துநடைக் கூத்து

தேவநாயகம் தேவானந்



நாடக வரலாறு பதியப்படுவதற்கு ஏலவே உள்ள செல்நெறியில் இருந்து விலகிய புதிய பாதை நோக்கிய பயணங்கள் அவசியமாகின்றன. அதற்குப் புதிய சிந்தனைக்கூடம் வளர்த்தெடுக்கப்படவேண்டும். அதன் வழி செயல்வீரர்கள் உருவாகவேண்டும். இதற்கான முயற்சிகளை நியம நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்க முடியாது. நியமமற்ற அதுவும் 'விட்டாத் தியானவெளி'களிலேயே இது சத்தியமாகும் என்பதையும் மனங்கொள்ளவேண்டும். இதற்கான காத்திருப்புக்கள் மட்டுமே பயணிப்பவையாக அமையாது ஆங்காங்கே முயன்று தவறலாக முடிந்தளவில் முயற்சிகள், முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

✦ ✦ ✦ ✦

நாடக வரலாற்றில் பதியப்படாத முக்கியமான விடயமாக அமைவது போர்க்கால அரங்கு. குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் போர் ஆட்கொண்டிருந்த காலகட்டத்தின் முயற்சிகள் பதியப்படாமலே போயின. அல்லது இவற்றையெல்லாம் ஒலி, ஒளிப் பேழைகளாகவும் எழுத்துருவங்களாகவும் பதிந்து வைத்திருந்த விடுதலைப் புலிகளின் பதிவுகள் அழிக்கப்பட்டதால் அந்தப் பதிவுகள் இல்லாது போயின எனலாம்.



புதுவை அன்பன்

இதனால் பல முக்கியமான தகவல்கள் இல்லாது போயின. இன்று செவிவழியாக அங்கொன்றும் இங்கொன்றுமாகவே கிடைக்கப்பெறுகின்ற சில தகவல்களே எஞ்சியிருக்கின்றன. அவ்வாறு கிடைக்கப்பெறுவதையாவது பதிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அது மனச்சாட்சியின் அடிப்படையானதாவும் காலத்தில் தேவையுணர்நத செயற்பாடாகவும் அமையும். இந்த முயற்சிகளை மூன்றாம் கட்ட ஈழப்போர் காலகட்டத்திலிருந்து இனங்காணமுடியும்.

இதில் இந்தக் காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் அதன் வடிவங்கள், உள்ளடக்கங்கள், மக்கள் மனதின் பதிவுகள் அல்லது பார்வையாளர்களின் மனதில் உள்ள ஆற்றுகைகள் என்று எல்லாவற்றையும் பதிதல் வேண்டும்.

போர்க்கால அரங்கில் நாடகங்கள் பேசியவிடயம் சார்ந்து தமக்கான வடிவங்களை எடுத்துக் கொண்டன. இந்த வடிவங்கள் மேடைகளுக்கு உரிவைகளாக இல்லாமல் மக்கள் கூடும் இடங்களுக்கு உரியவையாகக் காணப்பட்டன. ஊர்கள் தோறும் உயிர் பெற்றன. இவை பற்றிய நுட்பமான ஆய்வுகள் அவசியமாகின்றன.

போர்க்கால அரங்கு தனக்கான வடிவத்தேடலை ஏற்கனவே பாரம்பரியமாக இருந்த கூத்து வடிவங்களிலிருந்தான் முதலில் எடுக்கின்றன. பின்னர் புத்தாக்க முயற்சிகளில் மெல்ல தனக்கான வடிவத்தைத் தானே உருவாக்க முயற்சிக்கின்றன.

போர் அரங்கில் ஆரம்ப முயற்சிகளாக பழைய வடிவங்களில் புதிய உள்ளடக்கத்தை உட்புகுத்தி நாடகங்கள் தயாரிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இதற்கு முன்னர் அறுபதுகள் மற்றும் எழுபதுகளில் இந்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை வெற்றியளித்துமிருக்கின்றன.

ஈழப்போராட்டத்தின் மூன்றாக்கட்டம் ஆரம்பமாகிறபோது பழைய வடிவத்தில் புதிய உள்ளடக்கம் மற்றும் புதிய கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட நாடகத் தயாரிப்பில் முக்கியமானது புதுவை அன்பனின் 'களத்தில் காத்தான்' சிந்துநடைக் கூத்து.


✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாண மாவட்டத்தின் பாரம்பரிய அரங்க வடிவ அடையாளமாக நோக்கப்படத்தக்கது காத்தவராயன் சிந்து நடைக் கூத்து. இது யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சடங்குப் பெறுமானத்துடன் பரவலாக ஆடப்படுவதாகும். மதநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதுமாகும். மாரியம்மன் என்ற தெய்வத்திற்காக ஆடப்படுகின்ற மிகஉணர்வுபூர்வமான ஒரு கிராமிய நாடக வடிவமாகும். கடவுளிடம் தாம் வேண்டியது கிடைத்தால் நான் கூத்துக் கட்டுவேன் என்று நேர்த்திவைத்து கடவுளுக்காக நடத்தப்படுகின்ற சடங்காகவும் காத்தவராயன் கூத்து இன்றும் பலகிராமங்களில் காணப்படுகின்றது. இது ஒருவாழ்வியல் நம்பிக்கை சார்ந்த கலையாகும்.

கேள்விச் செவியாக கிராமங்களில் உலாவும் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கூத்து ஆடலும் பாடலுமாக ஆற்றுகை செய்யப்படுகிறது.

இது சிந்து நடையில் இலகுவான இசைப் பாடல்களைக் கொண்டு நகர்த்தப்படுகிறது. காத்தவராயன் என்ற பிரதான பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கதை பின் னப்பட்டுள்ளது.

காத்தவராயன் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்வதற்காக பல்வேறு சோதனைக்ளுக்கு ஆளாகி அதனை வெல்வதாக அதன் கதை அமைந்திருக்கும். இறுதியில் தான் விரும்பும் பெண்ணைத் திருமணம் செய்வதற்காக கழுமரம் ஏறுதலோடு நாடகம் முடிவடைகிறது. சிந்துநடையில் அமைந்த எளிய சந்தத்தினாலான பாடல் மெட்டுக்கள் இலகுவான கதை என்பன இதன் மேடை ஆற்றுகையை சிறப்பி கின்றன. உடுக்கு பிரதானமான இசை வாத்தியமாகப் பயன்படுத்தப்படுகிறது.



இதனால், பார்ப்போரை உருக்கொள்ளச் செய்யும் சக்தியும் காத்தவராயன் கூத்துக்கு உண்டு எனலாம். இங்கு நடிப்பவர் பாடி ஆட வேண்டும்.

ஒரு சவால் அதனால் உருவாகும் சிக்கல் பின்னர் சிக்கலை விடுவிப்பதற்கான பயணம் முர்ண் உச்சமடைதல் பின்னர் நிறைவு என்ற அடிப்படையான நாடகத் தத்துவதுக்கு ஏற்றதாக சிந்துநடைக் கூத்தும் காணப்படுகின்றது. இந்தக் கூத்து ஒரு குறிப்பிட்ட கிராமத்தின், சமூகத்தின் அடையாளத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

✦ ✦ ✦ ✦

இந்த வடிவத்தைப் புதுவை அன்பன் கையிலெடுத்து இந்திய அமைதிப்படைக்காலத்தை வெளிப்படுத்துகிறார். ஏலவே இருக்கின்ற பாரம்பரியமான நாடக வடிவத்தை கையிலெடுத்து புதிய உள்ளடக்கங்களை உட்புகுத்துகின்றபோது பாரம்பரிய வடிவம் மாற்றத்துக்கு உட்படுவது தவிர்க்க முடியாதது. இது ஒருவகையில் பாரம்பரிய வடிவத்தின் உருவச் சிதைவுக்கும் வழிவகுக்கும். குறிப்பாக, ஆண்டாண்டு காலமாகத் தாம் பார்த்து ரசித்து வந்த ஒருகதை மற்றும் வடிவம் மாற்றமடைகின்றபோது அதன் நிரத்தரப் பார்வையாளர்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பும் என்பதும் முக்கியமானது. இது புதுவை அன்பன் முன்னால் இருந்த பெரிய சவாலெனலாம்.

வடிவச்சிதைவும் உள்ளடக்க வேறுபாடும் பாரம்பரிய அரங்கின் நிரத்தரப் பார்வையாளர்களை திருப்திப்படுத்த வேண்டும். அதுவே மிகப் பெரிய தடையாகவும் சவாலாகவும் படைப்பாளிக்கு இருக்கும். இதனை வெல்வது கடினமானது. நீண்ட பாரம்பரியத்தின் நினைவுகளிலும் பழக்கங்களிலும் இருந்து விலகுவது சிரமமானது. இது மனமாற்றம் சார்ந்த ஒரு விடயமாகும்.

ஆனால், புதுவை அன்பன் இந்தத் தடை தாண்டி தயாரித்த நாடகம்தான் 'களத்தில் காத்தான்'. காத்தவராயன் கூத்தைதனது ஊரில் ஏலவே தயாரித்து மேடையேற்றிய தனது அனுபவத்தை அடிப்படையாகக் கோண்டு இந்த முயற்சியை முன்னெடுக்கிறார்.

காத்தவராயன் கூத்தில் காணப்பட்ட பல வேண்டத்தகாத விடயங்களை தவிர்த்து சமூக ஏற்புடமையோடு மாற்றங்கள் செய்யும்பணியை புதுவை அன்பன் 1970ஆம் ஆண்டுகளிலேயே மேற்கொண்டிருந்தார். குறிப்பாக காத்தான் கூத்தில் காணப்பட்ட சாதிய விடயங்கள் அதாவது, சில சாதியினரை இழிவுபடுத்துவதான காட்சிகள், கருத்துக்கள் காணப்பட்டதை நீக்கியி ருக்கிறார். அதேபோல ஆபாசமான வார்த்தைப் பயன்பாடுகள் காட்சிகள் என்பவற்றை இல்லாது செய்திருக்கிறார். இது பாரம்பரியமான கூத்துக்கா ரர்களிடமிருந்து எதிர்ப்பை ஏற்படுத்தினாலும் பொதுவாக மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்திருக்கிறது. இந்த முயற்சியின் தொடர்ச்சியாகவே 1990ஆம் ஆண்டுகளில் புதுவை அன்பனால் தயாரிக்கப்பட்ட 'களத்தில் காத்தான்' நாடகத்தைப் பார்க்கலாம். பழமையில் நின்று புதுமை செய்தலுக்கு சிறந்த எடுத்தக்காட்டு 'களத்தில் காத்தான்' சிந்துநடைக் கூத்து இது இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்பைப் பற்றிப் பேசுகிறது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கன்னியாக் குழப்பம்!

இலங்கையில் இனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குறித்து இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியை உதாரணம் காட்டித்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் கருத்துத் தெரிவித்து ஒரு நாள் கடப்பதற்கிடையில் அவரது அரசின் கீழே இனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புச்சாத்தியமானதுதானா என்கிற கேள்வியை எழுப்பியிருக்கிறது கன்னியாவில் நேற்று நடைபெற்ற சம்பவங்கள். திருகோணமலை மாவட்டம் கன்னியாவில் உள்ள புகழ் பெற்ற வெந்நீரூற்றுக்கிணறுகளைஒட்டியிருந்த பிள்ளையார் ஆலயத்தை இடித்தழித்துவிட்டு அதேயிடத்தில் விகாரை ஒன்றைக்கட்டுவதற்கானமுயற்சியைத்தடுத்துநிறுத்தத்தவறி அங்கு பதற்றத்துக்கு வழி ஏற்படுத்தியிருக்கும் ரணில் விக்கிரமசிங்க இனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக்கு குறித்துப் பேசுவது கேலிக்குரியது.

கன்னியாவெந்நீரூற்று ஆண்டாண்டுகாலமாகத்தமிழர்களின் மதப்புனித இடமாகத்திகழ்ந்து வந்திருக்கிறது. இதற்கு முன்னர் ஒருபோதும் அந்த இடத்திற்குப் பௌத்தவர்கள் உரிமை கோரியதில்லை. ஆனால் போரிற்குப் பின்னர் சடுதியாக அதிகரிக்கச் செய்யப்பட்ட சிங்களச் சுற்றுலாவிகளின் வடக்கு, கிழக்குக்கான வருகையின்போது கிழக்கில் கன்னியாவும் முக்கியவகிபாகத்தைக்கொள்ளத்தொடங்கியபோதேபௌத்தத்தின் கண்கள் அதன் மீது தீவிரமாகப் படியத் தொடங்கின. விளைவு, அந்த இடத்தை ஆக்கிரமித்து சிங்களபௌத்த வழிபாட்டிடமாகமாற்றும்காரியங்கள்வேகமாகஅரங்கேற ஆரம்பித்தன.

இந்தநகர்வுகள்தமிழர்களுக்குக்கோபமூட்டினாலும்போரால் துவண்டு போயிருந்த அவர்களால் உடனடியாக எதிர்ப்பைக் காட்ட முடியவில்லை. 2015இல் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தமிழர்கள் உதவியபோது கன்னியா பௌத்த ஆக்கிரமிப்பிலிருந்து தப்பிப் பிழைத்துவிடும் என்கிறநம்பிக்கைதமிழர்களிடம்சிறிதுதுளிர்விட்டது. ஆனால், நிலமை மேலும் மோசமாகி இருக்கின்றது என்பதே நிதர்சனம்.

இன்னும் சொல்லப்போனால், வடக்கு – கிழக்கில் மகிந்தவின் ஆட்சியில்காணப்பட்ட பௌத்தமயமாக்கலைவிடவும் ரணிலின் ஆட்சியின் கீழே அதிலும் குறிப்பாகக் கடந்த ஒரு வருடகாலத்திற்குள்ளேவடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல் தீவிரமடைந்திருக்கிறது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் பௌத்தமயமாக்கல் துடைத்தழிக்கப்படாவிட்டாலும் கட்டுப்பாட்டிலாவது இருக்கும் என்கிற எதிர்பார்ப்புக்கு நேர்மாறாக அது இன்னும் வீரியம் பெற்று வீற நடைபோடுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், நாவற்குழிசிங்களக்குடியேற்றவிகாரை, வலி. வடக்கில் விகாரை, கன்னியா என்று நீண்டு செல்கின்றது இந்தப் பட்டியல். இதனைக் கட்டுப்படுத்த முடியாத கையறு நிலையில் வேடிக்கை பார்த்து நிற்கின்றனதமிழர்களின் அரசியல் தலைமைகள். சிங்கள, பௌத்த தேசியவாத நிகழ்ச்சி நிரலை எதிர்த்துநிற்கும்துணிவற்றதலைவரானரணில்விக்கிரமசிங்கவால் தம்மீது எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியாது என்கிற துணிச்சலால்தான் பிக்குகள் துணிந்து இத்தகைய, பௌத்த மயமாக்கலை வடக்கு – கிழக்கில் மேற்கொள்கிறார்கள். இன்னும்சொல்லப்போனால், இதுஎல்லாம் ஆட்சியாளர்களின் மறைமுக ஆசியுடனும் ஆதரவுடனும் தான் நிகழ்கின்றன.

கன்னியாவில் பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் விகாரை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துநேற்றுநடத்தப்பட்டஅமைதிப்போராட்டத்தின்போது சைவத் துறவி ஒருவர் பிக்கு ஒருவர் முன்பாகவும் பொலிஸ் அதிகாரி முன்பாகவும் எச்சில் தேநீர் முகத்தில் உமிழப்பட்டு அவமதிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் பொலிஸார் சந்தேகநபர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இப்படிப்பட்ட ஒரு நீதியற்ற ஆட்சியில் முதுகெலும்பற்ற தலைவர்களினால் இனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை எப்படிக் கொண்டுவர முடியும்?

இங்கிலாந்தால் முடிந்தது என்றால், அங்கு சட்டத்தின் ஆட்சியும் இன, மத பாரபட்சமற்ற அணுகுமுறையும் உண்டு என்பதால் சாத்தியமாயிற்று. இங்கு நிலமை தலைகீழாக இருக்கும்போது ஒருங்கிணைப்பு எப்படி சாத்தியம்?

# கிரேக்கம் எழுச்சிபெறட்டும்



கிரேக்க நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் ஐரோப்பிய மையவாத அரசியல் செயல்பாட்டாளர்களுக்கு நிம்மதியைத் தந்திருக்கின்றன. நிலையான, தொடர்ச்சியான அரசுக்கும் நிர்வாகத்துக்கும் வழியேற்பட்டிருக்கிறது என்பதே நிம்மதிக்குக் காரணம்.

ஐரோப்பிய நாடுகளில் நடந்த தேர்தல்களில் பெரும்பாலும் மக்களிடம் செல்வாக்கு பெற்ற வலதுசாரிக் கட்சிகளே பெரிதும் வெல்கின்றன. தலைமை அமைச்சர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் தலைமையிலான புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றத்தின் மொத்தமுள்ள 300 இடங்களில் 158 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. அலெக்சிஸ் சிப்ராஸ் தலைமையிலான இடதுசாரிக் கட்சியான சிரிசா கட்சிக்கு 86 இடங்கள் கிடைத்துள்ளன. ஐரோப்பாவில் அரசுகளுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டுள்ள 'டைஎம்25' கட்சியின் கிரேக்கக் கிளையான 'மெரா25', சிப்ராஸ் கேட்டால் அரசு அமைக்க ஆதரவு தரக்கூடும். இந்தக் கட்சியின் தலைவர் முன்னாள் நிதியமைச்சர் யானிஸ் வரோவ்பக்கிஸ். இக்கட்சி 9 இடங்களில் வென்றுள்ளது. நாடாளுமன்றத்தில் அரசியல் சமநிலை நிலைத்தன்மை என்பதற்கு இன்னொரு பரிமாணம் இருக்கிறது. கடந்த பொதுத் தேர்தலில் மூன்றாவது இடம்பெற்றிருந்த 'கோல்டன் டான்' கட்சியை மக்கள் இத்தேர்தலில் நிராகரித்து விட்டார்கள். இக்கட்சி முஸ்லிம்களுக்கு எதிரானதாகும். ஆக, தேர்தல் மூலம் நிறைய செய்திகளைச் சொல்லியிருக்கின்றனர் கிரேக்க மக்கள்.

> கிரேக்க நாட்டுக்குள் நுழைய ஏராளமான அகதிகள் காத்துக் கிடக்கின்றனர், புதிதாக ஏராளமானோர் குடியேறிக் கொண்டிருக்கின்றனர். இவ்விரண்டும் கிரேக்கத்துக்குப் பெரிய பிரச்சினைகளாகிக் கொண்டிருக்கின்றன.

### பொருளாதார மீட்சி

கிரேக்க நாட்டுக்குள் நுழைய ஏராளமான அகதிகள் காத்துக் கிடக்கின்றனர், புதிதாக ஏராளமானோர் குடியேறிக்கொண்டிருக்கின்றனர். இவ்விரண்டும் கிரேக்கத்துக்குப் பெரிய பிரச்சினைகளாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, எந்தவித சார்பும் இல்லாமல் நடுநிலையில் நடக்க வேண்டிய கடமை ஆளும் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் சிரிசா என்ற எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது. பொருளாதாரம் சாதகமாக இருக்கும் நிலையில் பதவியேற்றிருக்கிறார் மிட்சோடாகிஸ். நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பன்னாட்டுச் சமூகம் அளித்த நிதியுதவியால் தான் அதன் பொருளாதாரத்தால் மீள முடிந்தது. கடுமையான சிக்கன நடவடிக்கைகளுக்கு நாடு உள்ளானது. வங்கி நிர்வாகத் துறை கிட்டத்தட்ட நொறுங்கிவிழும் அளவுக்கு இருந்தது. ஐரோப்பாவின் ஒற்றைச் செலாவணி மண்டலத்திலிருந்து கிரேக்கம் வெளியேற்றப்படலாம் என்ற அளவுக்கு அச்சம் நிலவியது. இப்போது ஈரோ செலாவணி நிலைப்படுத்தப்பட்டு, வலுப் பெற்றுவிட்டது.

### அடையப்பட வேண்டியவை

எனினும், நிலைமை நன்றாக இருக்கிறது என்று கூறிவிட முடியாது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2 வீதம் மட்டுமே. பொருளாதாரச் சீர்திருத்தங்களால் மக்கள் மிகவும் வேதனைப்படுகின்றனர். ஒரு காலத்தில் கிரேக்கத்தின் ஓய்வூதியத் திட்டம் மிகவும் தாராளமாக இருந்தது. இப்போது கல்விக்கும் சுகாதாரத்துக்கும்கூட நிதி ஒதுக்கீடு கடுமையாக வெட்டப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலேயே அதிகபட்சமாக கிரேக்கத்தில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் 18 வீதமாக ஆக இருக்கிறது. ஆகையால், சரிவிலிருந்து முழுமையாக நாட்டை மீட்கப் பெரும் நடவடிக்கைகள் வேண் டும். புதிய அரசின் உழைப்பு அதற்கு வழிவகுக்கட்டும்!

*நன்றி : இந்து தமிழ் திசை*

■

---

## முள்ளிவாய்க்காலுக்குப்...

பிலோ அல்லது தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் இடையேயோ இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு தென்கையிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவிலின் வரலாறு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் இருப்புக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழின இருப்புக்கும் மிக அவசியமானது. சிங்களபௌத்த அரசானது தமிழர் வரலாற்றை மகாவம்சமைய வரலாறாக திரிபுபடுத்த முயற்சிக்கின்றது. ஏனைய மதத்தலங்களோடு ஒப்பிடுகையில், சிங்களபௌத்த மயமாக்கலில் சைவ ஆலயங்கள் பாதிக்கப்படுவது அதிகம் என்பது எல்லோருக்கும் தெரிந்த தரவு ரீதியல் நிறுவப்பட்ட உண்மை.

சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிரான பின்முள்ளிவாய்க்கால் வரலாற்றுத்தளத்தில் மிகச் சிறிய எதிர்வினை முயற்சிகள் அடித்தள மக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதோடு இவ் எதிர்வினை நடவடிக்கைகள் பாரியளவில் தமிழ் மக்கள் அரசியல் உரிமைசார்ந்து மாற்றத்தை கொண்டு வந்ததா என்பதை ஆராயவேண்டிய தேவை உள்ளது கடந்த ஒரு தசாப்தமாக. இவ்வாறான எதிர்வினைகளை ஒரு சமூக இயக்கமாக மாற்றுகின்ற தலைமைத்துவவெளி இன்னும் வெறுமையாகவே உள்ளது., சிங்களபௌத்த காலனித்துவத்துக்கு எதிரான நிறுவனமயமாக்கப்பட்ட தந்திரோபாய நகர்வுகள் கட்டமைக்கப்படும் வரை காலனித்துவம் இன்னும் அகலமாக விரிந்து கொண்டே போகும்.

இன்று கன்னியா பிள்ளையார் கோவில் நாளை கோணேசர் கோவிலாகவும் இருக்கலாம். இந்த சிங்கள பௌத்த அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தை தமிழ் அரசியல் தலைமைகள் இல்லை என்று நிராகரிக்க முடியாது. இவ்வாறான சிங்களபௌத்த அரசியல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு எதிரான மாற்றுவழியை தமிழ் அரசியல் தலைமைகள் முன்வைக்காதது அவர்களின் பொறுப்புக்கூறலிலிருந்து நழுவுவதாக அமையும்.

கன்னியா பிள்ளையார் கோவில் தொடர்பில் பல தரப்பினரிடம் இது பற்றி கலந்துரையாடி உள்ளோம். அது பற்றிய குறுகிய, நீண்டகால விளைவுகள் பற்றியும் தமிழின இருப்பின் கேள்விக்குட்படுதல் பற்றியும் பல்வேறு தளங்களில் வெளிப்படுத்தி உள்ளோம். ஆனால் இதுவரைக்கும் அசமந்தபோக்கு கடைப்பிடிக்கப்படுவது இது தொடர்பில் மத்தியஸ்தம் வகிப்பவர்களின் வகிபங்கை சந்தேகம் கொள்ளச்செய்கின்றது. இனியும் இவ்வாறான நிலைமை தொடரும் என்றால் மக்கள் மயப்படுத்தப்பட்ட வன்முறையற்ற தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். மக்கள் மைய முன்னெடுப்புப் போராட்டங்கள் சிங்களபௌத்த காலனித்துவத்துக்கு தீர்வாக அமையும் என்றால் அவற்றை ஒழுங்குபடுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறான போராட்ட முனைப்புக்கள் நாங்கள் வேறு இன மத மக்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதற்கு அப்பால் தமிழின இருப்பை உறுதிப்படுத்துவதோடு இலங்கையின் பல்லினத்தன்மையையும் தொடர்ந்து பேணுவதற்கு உறுதி செய்யும்.

இன்று கன்னியா நாளை எது என்று தெரியாமல் எதுவுமே நடக்கும் என்ற நிச்சயமற்ற தன்மைக்குள் தமிழினம் வாழத் தள்ளப்படுகின்றது. சிங்களபௌத்த காலனித்துவம் இலங்கையில் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை விரைவுபடுத்துகின்றது. இது தொடர்பில் பரந்த கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டு தீர்வுகள் தொடர்பில் விரைந்து செயற்பட ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழைத்து நிற்கின்றோம் என்றுள்ளது.

(ஒ.5)

கபடிச் சம்மேளன

## செயற்குழுவில் 3தமிழர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 17
கொழும்பு விளையாட்டு அமைச்சின் டங்கன்வைற் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை கபடிச் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் முதன் முறையாக 3 தமிழர்கள் செயற் குழுவில் இடம் பிடிந்துள்ளனர். இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஆர்.சகீபன் செயலராகவும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். யோகரெட்ணம் உப தலைவராகவும். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எ.எல். அனஸ் அகமட் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (23)





புதுக்குடியிருப்பு

# மத்திய சமுதாய கழக அணி கிண்ணத்தை சுவீகரித்தது

முல்லைத்தீவு, ஜூலை 17
முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இலங்கை துடுப்பாட்டச் சபையால் நடத்தப்படும் பிரிவு 3 இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப் பந்து துடுப்பாட்டத் தொடரில் புதுக்குடியிருப்பு மத்திய சமுதாய கழக அணி 151 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய சமுதாய கழக அணியை எதிர்த்து உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டு கழக அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய சமுதாய கழக அணி 49.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.
அணி சார்பாக சஜிந்தன் 73 ஓட்டங்களையும், லக்கீரன் 59 ஓட்டங்களையும், கபிலன் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் ரூபன் 3 இலக்குகளையும் வினுசன், கிருசாந் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு களமிறங்கிய உடையார்கட்டு நண்பர்கள் விளையாட்டு கழக அணி 24.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 96 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக கஜன் 25 ஓட்டங்களையும், பவி 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ரதுர்யன் 8 இலக்குகளை கைப்பற்றி அசத்தினார்.




சிறந்த துடுப்பாட்ட வீரர், மற்றும் ஆட்ட நாயகன் விருதை புதுக்குடியிருப்பு மத்திய சமுதாய கழக அணி வீரர் சஜிந்தன் பெற்றுக் கொண்டார்.
சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் தொடராட்ட நாயகன் விருதுக்காக புதுக்குடியிருப்பு மத்திய சமுதாய கழக அணி வீரர் ரதுர்யன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## புத்தூர் கலைமதி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தால் வருடாந்தம் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை பொது மைதானத்தில் இடம் பெற்ற 'ஏ' பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்ற கிண்ணத்தை சுவீகரித்தது. (23)



## சிறப்புத் தேவையுடையோரின் விளையாட்டுவிழா மன்னாரில்

மன்னாரில், ஜூலை 17
மன்னார் மாவட்டத்தில் உள்ள சிறப்புத் தேவையுடையோருக்கான விளையாட்டு விழா மன்னார் நகரசபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது.
பிரதேச ரீதியாக ஏராளமான சிறப்புத் தேவையுடையவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார்கள்.
இந்த நிகழ்வுக்கான அனுசரணையை மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் சிறப்புத் தேவையுடையோருக்கான தேசிய செயலகம் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சு ஆகியன வழங்கியிருந்தன.



இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்தாஸ், மேலதிக மாவட்டச் செயலர் சி. குணபாலன் மற்றும் மன்னாரின் ஐந்து பிரதேச செயலகங்களின் செயலர்கள் மன்னார் மாவட்டச் செயலகத்தின் முதன்மைக் கணக்காளர் உள்ளிட்ட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். (ம-213)

## மட்டுவில் மோகனதாஸ் வி.க கிண்ணத்தை தனதாக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் வருடாந்தம் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.
வல்வெட்டித்துறை பொது மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற 'பி' பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார்விளையாட்டுக்கழகஅணிமோதியது. இதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது. (23)



## இன்றைய ஆட்டம்

யாழ்.ஜூலை 17
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(23)

கால்பந்தாட்டத் தொடர்;

### மன். மாவட்ட இளைஞர் அணி வெற்றி

மன்னார்.ஜூலை 17
31 ஆவது இளைஞர் தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணி வெற்றி பெற்றது.
பதுளை வின்சன் டயஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணியை எதிர்த்து அம்பாந்தோட்டை மாவட்ட இளைஞர் கால்பந்தாட்ட அணி மோதியது.
ஆட்ட நேர முடிவில் இதில் மன்னார் மாவட்ட அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மன்னார் மாவட்ட இளைஞர் அணி சார்பாக லிதர்சன் 2 கோல்களையும், ஜோன்சன், வின்சன் பற்றிக், ஜீன்சுயாட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலை பெற்று கொடுத்தனர்.



# ஐ.சி.சி விதிகளை மறுபரிசீலனை செய்யும்

## நியூசி. பயிற்சியாளர் நம்பிக்கை


நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகள் ஓட்ட எண்ணிக்கையில் சம நிலையில் காணப்பட்டது. இதனால் சுப்பர் பந்துப்பரிமாற்றம் வழங்கப்பட அதிலும் இரு அணிகளும் சமநிலையாக. பவுண்டரிகள் அடிப்படையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இங்கிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் தோற்றது குறித்து நியூசிலாந்து பயிற்சியாளர் கேரி ஸ்டீட் தெரிவித்ததாவது:

100 பந்துப்பரிமாற்றங்கள் முழுமையாக விளையாடிய பின்னர் இரு அணிகளும் சமமான ஓட்டங்களைப் பெற்றிருந்த போதும் நீங்கள் தோல்வி அடைந்தால் அது மிகமிக வெற்று உணர்வை அளிக்கும். ஆனால் அந்த விதிகள் விளையாட்டின் தொழில்நுட்பங்கள் ஆகும்.

இந்த விதிகளை எழுதியபோது உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இது போன்று சமநிலை சம்பவங்கள் இடம் பெறும் என்று நினைத்து அவர்கள் எழுதியிருக்க மாட்டார்கள். இந்த விதிகளை மறுபரிசீலனை செய்வார்கள் என்று நான் கண்டிப்பாக நம்புகிறேன். போட்டி முடிவுகளை பெற பல வழிமுறைகள் உள்ளன - என்றார்.





## தர்ஜினியின் அபார ஆட்டத்தால்

# சிங்கப்பூரை வீழ்த்தியது இலங்கை அணி

வலைப்பந்து உலகக் கிண்ணத் தொடரில் சிங்கப்பூர் அணியுடனான போட்டியில் இலங்கை அணி 88:50 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது. இங்கிலாந்தின் லிவர்பூல் நகரில் 15ஆவது வலைப்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை உட்பட 16 நாடுகள் பங்கேற்றுள்ளன. அணிகள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் குழு A இல் போட்டியிடும் இலங்கை வலைப்பந்தாட்ட அணி தனது முதல் போட்டியில் சிம்பாப்வேயிடம் 79-49 என்ற அடிப்படையில் தோல்வியைச் சந்தித்தது. இதனையடுத்து நடைபெற்ற வடக்கு அயர்லாந்து அணியுடனான போட்டியில் 67:50 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியடைந்தது.

இரண்டாம் சுற்றுக்கு முன்னேற அடுத்த போட்டியில் கட்டாயம் வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற நிலையில் நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலிய அணியுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை அணி மோதியது. இந்தப் போட்டியிலும் இலங்கை வலைப்பந்தாட்ட அணி 99:24 என்ற புள்ளிகள் அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது.

இந்தத் தோல்வியோடு இலங்கை வலைப்பந்தாட்ட அணி உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாம் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

எனினும், இந்தத் தொடரில் 13 தொடக்கம் 16 வரையிலான இடத்தை பெறும் அணிகளை தெரிவு செய்யும் சுற்றில் சிங்கப்பூர், பிஜி மற்றும் சமோவா ஆகிய நாடுகளுடன் தொடர்ந்து விளையாடும் சந்தர்ப்பத்தை இலங்கை அணி பெற்றுள்ளது.

அதன்படி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சுற்றில் தமது முதல் போட்டியிலேயே இலங்கை வலைப்பந்து அணி, சிங்கப்பூர் வலைப்பந்து அணியை எதிர்கொண்டது. இதில் இலங்கை அணி 88:50 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பாக தர்ஜினி சிவலிங்கம் 76 புள்ளிகளைப் பெற்று போட்டியில் அதிக புள்ளிகள் பெற்ற வீராங்கனையாக மாறினார். இதேநேரம், சிங்கப்பூர் அணியின் கேய் வேய் டொய் 16 புள்ளிகளுடன் அவரது தரப்பில் அதிக புள்ளிகள் பெற்ற வீராங்கனையாக காணப்படுகின்றார்.

# வில்லியம்சனை மீண்டும் கௌரவப்படுத்திய ஐ.சி.சி

பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் இருந்து தனது கனவு அணியை அறிவித்துள்ளது. இதில் நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சனுக்கு அணித் தலைவர் பொறுப்பை கொடுத்து மீண்டுமொரு முறை கௌரவப்படுத்தியுள்ளது. உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு வெற்றியும், நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சனுக்கு சிறந்த தலைமைத்துவம் என்ற அடிப்படையில் அவருக்கு தொடராட்ட நாயகன் விருதும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பரபரப்பான இறுதியாட்டத்தில் ஆடிய இங்கிலாந்து அணியில் இருந்து 4 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் ரோய், ரூட், பென்ஸ்டோக்ஸ், ஆர்ச்சர் இடம்பிடித்துள்ளனர். நியூசிலாந்து அணியின் பெர்குசனும் இடம்பிடித்துள்ளார். அரையிறுதியோடு வெளியேறிய ஆஸ்திரேலியா, இந்திய அணியில் ரோகித் சர்மா, பும்ரா இடம்பிடித்துள்ளனர். ஆஸ்திரேலியா அணியில் மிச்சல் ஸ்டார்க், கேரி இடம்பிடித்தனர். அத்தோடு பங்களாதேஷ் அணியில் இருந்து சகலதுறை அதிரடி ஆட்டக்காரர் ஷகிப் அல் ஹசன் உள்வாங்கப்பட்டுள்ளார். இந்த அணியில் இந்திய அணித் தலைவர் கோக்லி, ஆஸ்திரேலியா வீரர் வோர்னர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.



## 2023ஆம் ஆண்டு

# இந்தியாவில் உலகக் கிண்ணம்

எதிர்வரும் 2023 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சியின் 13ஆவது ஆண்களுக்கான பன்னாட்டு ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரானது இந்தியாவில் நடைபெறவுள்ளதாக ஐ.சி.சி. தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தத் தொடரானது 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் ஆரம்பமாகி மார்ச் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் இறுதிப் போட்டி மும்பையில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா 1987, 1996 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் ஆசிய அண்டை நாடுகளுடன் இணைந்து பன்னாட்டு ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரை நடத்தியிருந்தது. எனினும் 2023ஆம் ஆண்டு ஏனைய நாடுகளுடன் கைகோர்க்காது தனியாக இந்தத் தொடரை நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இந்தியா தனியாக நடத்துவது இதுவே முதல் முறையாகும்.



# பென்ஸ்டோக்ஸுக்கு மோர்கன் புகழாரம்

உலகக் கிண்ணத் தொடரில் முதன்முறையாக கிண்ணம் வென்று 44 வருட கனவுகளை நனவாக்கிக் கொண்டது இங்கிலாந்து அணி.

வெற்றி பெற்றது குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன் தெரிவித்ததாவது: நியூஸிலாந்து அணித் தலைவர் வில்லியம்சனுக்கும், அந்த அணியினருக்கும் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். வில்லியம்சன் தனது அணியை அபாரமாக வழிநடத்துகிறார். லீக் சுற்றில் அந்த அணி அற்புதமாகச் செயற்பட்டது. சீரான திறனை தொடர்ச்சியாக வெளிப்படுத்தினார்கள். அரையிறுதியில் மிகவும் வலுவான இந்திய அணியை இலக்குவாக துரத்தியடித்தது.

இறுதிப் போட்டியில் ஆடுகளம் கடினமாக இருந்ததால் எல்லோருமே ஓட்டங்களைச் சேர்ப்பதில் சிரமப்பட்டோம். பட்லர், பென்ஸ்டோக்ஸ் ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டத்தைக் கட்டமைத்தனர். அது எங்களை ஆழமாக அழைத்துச் செல்லும் என்று நினைத்தேன், அப்படியே நடந்தது. சுப்பர் பந்துப்பரிமாற்றத்தில் சிறப்பாகச் செயற்பட்ட பென்ஸ்டோக்ஸ், ஜோப்ரா ஆர்ச்சரை பாராட்டியே ஆக வேண்டும். அவர்கள் இருவரும் சமீப காலமாகவே அசத்தி வருகின்றனர்.

ஜோப்ரா ஆர்ச்சர் வாய்ப்பு கிடைக்கும் சமயங்களில் எல்லாம் அதை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார். பென்ஸ்டோக்ஸ் ஒட்டுமொத்த ஆட்டத்தின் சூழ்நிலை, உணர்வுகளை தனது அனுபவத்தால் அற்புதமாக கையாண்டார். அவரது ஆட்டத்தை வீட்டில் இருந்து தொலைக் காட்சியில் பார்த்த அடுத்த தலை முறையினர் நிச்சயம் பென்ஸ்டோக்ஸ் போன்று வரவேண்டும் என முயற்சிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.



# இலங்கைக்கு எதிரான தொடர்; சகிப் அல் ஹசனுக்கு ஓய்வு

பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாட வுள்ளது. இதில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட சகிப் அல் ஹசன் இலங் கைக்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் அணியில் இடம்பெறவில்லை.

உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணி லீக் சுற்றோடு வெளியேறினாலும், இலங்கை தொடருக் கான பங்களாதேஷ் அணிக்கும் அணித் தலைவராக மோர்தசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தொடருக்கான பங்களாதேஷ் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்:

மோர்தசா, தமிம் இக்பால், சவுமியா சர்கர், சவுமியா சர்கர், அனாமுல் ஹக்யூ, முகமது மிதுன்,முஷ்பிகுர் ரஹிம், மெஹ்முதுல்லா ரியாத், மொசாடெக் ஹொசைன், சபீர் ரஹ்மான், மெஹிதி ஹசன், தைஜுல் இஸ்லாம், ருபெல் ஹொசைன், முக மது ஷாய்புதின், முஸ்டாபிஜுர் ரஹ்மான்.

## மரண அறிவித்தல்

**திருமதி இராசம்மா வல்லிபுரம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் பகுதித்தலைவர் - யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)



தோற்றம் 03.06.1937 மறைவு 15.07.2019

யாழ்ப்பாணம் மானிப்பா யைப்பிறப்பிடமாகவும்வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராசம்மா வல்லிபுரம் கடந்த (15.07.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி வல்லிபுரத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான நாகமுத்து, சின்னத் தங்கம், மீனாட்சி, இராசையா (ஓய்வுபெற்ற உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர், மட்டக்களப்பு) மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜெயமதி (லண்டன்), ஜெயதேவி (லண்டன்), ஜெயஜோதி (ஆசிரியர், யா/ இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்), முருகதாஸ் (அதிபர், மட்/ஸ்ரீ மாமங்கேஸ்வரர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லோகேஸ்வரன் (லண்டன்), சந்திரராஜன் (லண்டன்), மதியழகன் (நூலக தகவல் உதவியாளர், கிளிநொச்சி வளாகம், யாழ் பல்கலைக்கழகம்), ரதிவதனா (ஆசிரியர், மட்/ செங்கலடி மத்தியகல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாரங்கன், சாருஹன், வர்ணன், பிரவீன், ஹேதாரணி, பவதாரணி, ஷர்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.07.2019) ஞாயிற்றுக் கிழமை மு.ப10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஜெய மஹால்"
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்

தகவல்: குடும்பத்தினர்.
077 612 7411

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2019 பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களுக்குமான
மாபெரும் விசேட செயலமர்வு
காலம் : ஜூலை 19 , 20, 21
ICT, விவசாய விஞ்ஞானம்
புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி
மாதிரி வினாத்தாள்களும், கையேடுகளும் வழங்கப்படும்.
Wisdom Technical College முற்பதிவுகளுக்கு:- 077 248 7774

**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி - லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்)
A/L 2019
தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான
விசேட செயலமர்வு
ஆரம்பம்:- 19, 20, 21 .07.2019
8.30 மணி முதல் 02.00 வரை
I.C.T, விவசாயம், புவியியல், சித்திரம்
இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்.
அனைத்து பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்புகளுக்கு:- 077 170 3549, 077 017 5346

**காணி விற்பனைக்கு உண்டு**
பொற்பதி வீதி, கோண்டவிலில் ரம்மிய மான அயல்சூழலில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 476 6040
021 205 9443

**காணி தேவை**
தனியார் நிறுவனமொன்றிற்கு மிருசுவில் தொடக்கம் பளைக்கு உட்பட்ட பகுதியில், A9 வீதி அருகில் இரண்டு ஏக்கர் வரையான காணி நீண்டகால வாடகைக்கு தேவை. வீட்டுடன் காணி இருப்பின் கவர்ச்சிகரமான வாடகை வழங்கப்படும்.
தொடர்பு :- 077 773 1218

தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பம்....
Only 2 Days Full time & 100% Practical oriented Class
Mobile phone , CCTV Repairing Course
Qualified Lectures From American Institute-Colombo
Reg Fee : 1,000 Course fee (Mobile 7,500 I CCTV 9,000)
**DTPE Campus**
Course Inquires 214680964 / 776351865
No 925, Thaddartheru Junction, K.K.S Road, Jaffna
Supported By Jaffna Computer Society www.jcsociety.org.lk

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**வைத்திலிங்கம் இலட்சுமணன் (பனங்கட்டி)**



மண்ணில் 28.07.1939



விண்ணில் 17.07.2011

எட்டு ஆண்டுகள் ஆனதோ
பரிதவிக்கின்றோம் - ஐயா
நீங்கள் விழிகளை மூடிய நாளிலிருந்து
எங்கள் விழிகள் கண்ணீர் சிந்துகின்றன
எங்கள் வாழ்வில் ஒளி தந்த அன்பான தந்தையே
புன்னகை பூத்த முகம் எங்கள் நெஞ்சங்களில்
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகலாமோ ஐயா
எங்கள் நெஞ்சத்தில் என்றும் தெய்வமாய் குடியிருப்பீர்கள்

" தந்தை காலடி எமது கோயில் "

**குடும்பத்தினர்.**
**இலட்சுமணன் ஹாட்வெயார்**
**கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.